பகுதி 01



தந்தை பெரியார் பொன்மொழிகள்!

தொகுப்பு

வி.சி.வில்வம்

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஜாதியை ஆட்டினால் மதம், கடவுள், சாத்திரங்கள் அத்தனையும் ஆடுகின்றன.

பெரியார், விடுதலை - 27.10.1953

தொகுப்பு - வி.சி.வில்வம்

சிரைக்கிற, வெளுக்கிற, மூட்டை தூக்குகிற, கல் உடைக்கிற, கக்கூசு கழுவுகிற பார்ப்பனர்கள் யாரையாவது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?



பெரியார், விடுதலை - 25.03.1954

தொகுப்பு - வி.சி.வில்வம்

எப்பாடுபட்டாவது மக்களைப் படிக்க வைத்து, வசதி செய்து கொடுத்து, தகப்பன் வேலையை விட்டு, ஜாதி வேலையை விட்டு, வேறு வேலைக்கு அனுப்ப வேண்டும்.

பெரியார், விடுதலை – 09.05.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஜாதி எனும் வார்த்தையே வடமொழி தான். தமிழில் ஜாதி என்பதற்கு வார்த்தையே இல்லை.

பெரியார், விடுதலை - 15.09.1957

தொகுப்பு - வி.சி.வில்வம்

எந்தத் தலைமுறையும் தன் ஜாதி வேலைக்கே வராமல் செய்வதுதான் முக்கியக் கடமை ஆகும்.

பெரியார், விடுதலை 09.05.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்பதே திராவிடர் கழகத்தின் முதலாவது கொள்கை ஆகும்.

பெரியார், விடுதலை - 13.11.1961

பார்ப்பான் சாணியை மிதித்தால் தண்ணீர் ஊற்றிக் காலைக் கழுவி விடுவான். பறையனையோ, சக்கிலியையோ, சூத்திரனையோ தொட்டுவிட்டால் இடுப்பு வேட்டியோடு குளிக்கிறான்.

பெரியார், விடுதலை - 01.05.1963

தொகுப்பு - வி.சி.வில்வம்

இத்தனைக் கடவுள்கள் இருந்தும் நம்மைத் தாழ்ந்த ஜாதி மக்களாக, சூத்திரர்களாக, பஞ்சமர்களாகத் தானே வைத்துள்ளன?

பெரியார், விடுதலை - 24.08.1962

தொகுப்பு - வி.சி.வில்வம்

நமது குழந்தைகளுக்கு ஆரம்ப ஆசிரியர்கள் அவர்களின் தாய்மார்களே ஆவர்.



பெரியார், குடிஅரசு - 01.05.1927

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஒருவன் பாடுபட்டு பட்டினியாய் கிடப்பதும், ஒருவன் பாடுபடாமல் வயிறு புடைக்கத் தின்று புரள்வதையும் எப்படி சகித்துக் கொள்ள முடியும்?

பெரியார், பகுத்தறிவு – 21.10.1934

தொகுப்பு - வி.சி.வில்வம்



ஒருவன் பல
வேலைகளைக்
கைப்பற்றிக்
கொள்வதும்,
மற்றொருவன்
செய்வதற்குக் கூட
வேலையில்லாமல்
திண்டாடி திரிவதையும்
நாம் ஏற்க முடியாது!

பெரியார், பகுத்தறிவு - 21.10.1934

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஜாதியையும், மதத்தையும்
பிணைத்துப் பின்னிக்
கொண்டிருக்கும்படி
இறுகக் கட்டி
வைத்திருக்கிறார்கள்.
ஆகையால் ஜாதியை
அழிக்கத்
தலைப்படுகையில்,
மதத்தையும் வெட்டப்பட
வேண்டியுள்ளது!

பெரியார், திராவிடன் – 05.10.1929

கருப்பன், காதர் உசேனாக மாறிவிட்டால், கனகு அய்யர், ’டேய் கருப்பா! எட்டி நில்’, என்று கூறுவதை விடுத்து, ’வாங்க உசேன், சவுக்கியம் தானா? என்று கேட்பார்.

பெரியார், குடிஅரசு – 26.10.1946

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆண்கள், பெண்களிடம் இருக்கும் மூடநம்பிக்கைகளைப் போக்க வேண்டும். துணிமணி, நகைகளை வாங்கிக் கொடுத்து ஏமாற்றுவது சரியன்று.

பெரியார், விடுதலை – 27.07.1958

தொகுப்பு - வி.சி.வில்வம்

பெண்களே நகை,
சேலைகளில் உள்ள
பிரியத்தை ஒழித்து
விடுங்கள்.
இல்லாவிட்டால்
நீங்கள் வெறும்
பொம்மைகளாக
ஆக வேண்டும்.

பெரியார், விடுதலை - 20.05.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

மனிதன் பெண்களைச் சொத்தாக நினைக்கிறானே தவிர, தன்னைப் போன்ற உணர்ச்சிக்கு அருகதையுள்ள ஜீவன் என்று மதிப்பதில்லை.

பெரியார், விடுதலை – 20.09.1947

தொகுப்பு - வி.சி.வில்வம்

DK IT WING

வேண்டுதல் எனும் பெயரில் பார்ப்பனர் அல்லாத ஆண்களும், பெண்களும் தலையை மொட்டை அடித்துக் கொள்கின்றனர். இதுபோல் பார்ப்பனர்கள் செய்வதுண்டா?

பெரியார், விடுதலை - 20.09.1947

தொகுப்பு - வி.சி.வில்வம்

சீர்திருத்த மனம் படைத்த, அறிவுள்ள பெண்களிடம் இருந்துதான் சீர்திருத்த, அறிவுள்ள செம்மல்கள் தோன்றக் கூடும்.

பெரியார், விடுதலை - 02.11.1948

ஆணும், பெண்ணும் சம உரிமை இல்லாத உலகில், சுதந்திரத்தைப் பற்றிப் பேச எவனுக்கு யோக்கியதை இருக்கிறது?

பெரியார், விடுதலை– 28.06.1973

தொகுப்பு - வி.சி.வில்வம்

தொழில் பயிற்சி மக்களிடம் ஏற்பட்டுவிட்டால், மூடநம்பிக்கை உணர்ச்சியும் நல்ல அளவுக்குக் குறையும்.

பெரியார், விடுதலை - 11.10.1965

தொகுப்பு - வி.சி.வில்வம்

இஸ்லாம் பெண்களுக்கு இந்த உலகத்தைக் கூடப் பார்க்க விடமாட்டேன் என்கிறார்கள். முகத்தை மூடி அல்லவா சாலையில் நடமாட விடுகிறார்கள்.

பெரியார், விடுதலை – 28.06.1973

தொகுப்பு - வி.சி.வில்வம்



பெண்
விடுதலைக்காகப்
பாடுபடுவதாக
ஆண்கள் காட்டிக்
கொள்வதெல்லாம்,
பெண்களை
ஏமாற்றுவதற்குச்
செய்யும் சூழ்ச்சியே!

பெரியார், குடிஅரசு - 22.12.1929

தொகுப்பு - வி.சி.வில்வம்

பெண்கள் வெறும் சமையல்காரியாக, கட்டிலறைப் போகப் பொருளாக, காட்சிப் பொருளாக இருப்பதில் பயனில்லை

பெரியார், குடிஅரசு – 02.11.1948

நான்கு குடும்பங்கள் சேர்ந்து சமையல்காரரை வைத்துச் சமைக்கட்டும். எல்லோருடைய முயற்சியும், நாட்டு மக்களின் பொது நன்மைக்குப் பயன்படட்டும். பெருமை தரும் உத்தியோகங்களுக்கு நம்மைத் தகுதியாக்க வேண்டும்.

பெரியார், குடிஅரசு - 02.11.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

அரசாங்கம் பெண்களுக்குப் போலீஸ் உத்தியோகம் கொடுக்க வேண்டும். 100 உத்தியோகம் இருந்தால் அதில் 50 விகிதம் பெண்களுக்குக் கொடுக்க வேண்டும்.

பெரியார், விடுதலை – 16.07.1970

தொகுப்பு - வி.சி.வில்வம்

பெற்றோர்கள் ஆண்களைப் படிக்க வைக்காவிட்டாலும், பெண்களை 20 வயது வரை படிக்க வைக்க வேண்டும்.

பெரியார், விடுதலை – 12.10.1971

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பனப் பெண்கள் பாத்திரம் கழுவவோ, வீட்டுக்குச் சாணம் போடவோ, விறகு விற்கவோ, கூலி வேலை செய்யவோ தெருக்களில் திரிவதில்லை. 100 க்கு 100 படித்திருக்கிறார்கள். நம் பெண்களும் அவ்வாறே படிக்க வேண்டும்.

பெரியார், குடிஅரசு - 07.07.1940

தொகுப்பு - வி.சி.வில்வம்

நமது இலக்கியங்களில் பெண்களின் அங்கம், அவயம், சாயல் ஆகியவைகளைப் பற்றி 50 வரிகள் இருந்தால், அவர்களது அறிவு, திறமைகள் குறித்து ஒரு வரி கூட இல்லை.

பெரியார், குடிஅரசு - 21.09.1946

தொகுப்பு - வி.சி.வில்வம்

பெண்களும்
ஆண்களைப் போல்
உடல் வலிமையில்
சிறப்படைய வேண்டும்.
தேகப் பயிற்சி,
ஆயுதப்பயிற்சி முதலிய
பழக்கங்களைப்
பெற்றிருக்க
வேண்டும்.

பெரியார், குடிஅரசு - 17.07.1932

தொகுப்பு - வி.சி.வில்வம்

பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்வதையும், பிறருக்கு அழகாகத் தெரிய வேண்டும் என நினைப்பதையும் மாற்றிக் கொள்ள வேண்டும்.

பெரியார், விடுதலை - 29.05.1967

தொகுப்பு - வி.சி.வில்வம்

உருப்போட்டு ஒப்புவிப்பதே பரிட்சை முறையாக இருக்கக் கூடாது. அப்படியானால் அர்ச்சகனும், புரோகிதனுமே ஒப்புவிக்க முடியும்.

பெரியார், குடிஅரசு - 22.05.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

அடுப்பங்கரையே கைலாசம், ஆம்படையானே சொர்க்கலோகம் என்கிற காலம் மாறி வருகிறது.

பெரியார், குடிஅரசு - 24.01.1932

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பான் படிக்க வேதபாட சாலை, சமஸ்கிருதப் பள்ளிகள் ஏற்படுத்தி, ஓசி சோறு போட்டார்களே தவிர, காதொடிந்த ஊசி அளவு கூட நமக்கு நன்மை இல்லை.

பெரியார், விடுதலை – 29.04.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

தகுதி, திறமை என்று சொல்லி, அனைத்து துறைகளையும் நானே எடுத்துக் கொள்வேன் என்று பார்ப்பனர்கள் சொல்வதை ஏற்க முடியாது.



பெரியார், விடுதலை 09.04.1950

தொகுப்பு - வி.சி.வில்வம்

பிள்ளைகளை மதவாதியாக ஆக்குவதை விட, அறிவாளியாக ஆக்க வேண்டும்.



பெரியார், விடுதலை - 16.12.1969

தொகுப்பு - வி.சி.வில்வம்

உலகில் அனேகப் பரிட்சைகளுக்கு பாஸ், ஃபெயில் இருக்கிறதே தவிர, மார்க்கு போடப்படுவதில்லை.

பெரியார், விடுதலை 16.03.1968

தொகுப்பு - வி.சி.வில்வம்

மாணவர்களைக் கசக்கிப் பிழிகிற பரீட்சை முறை இந்த நாட்டில் தான் இருக்கிறது. அறிவு பெற்ற நாடுகளில் இது கிடையாது

பெரியார், விடுதலை 28.11.1959

தொகுப்பு - வி.சி.வில்வம்

மாணவர்களுக்குப் படிப்புதான் முக்கியம். எந்தக் காரணத்தைக் கொண்டும் தளர்ச்சியடைக் கூடாது. சினிமாவுக்கும், கோவிலுக்கும் போகக் கூடாது

பெரியார் விடுதலை 30.06.1957

தொகுப்பு - வி.சி.வில்வம்

படிக்கும் பிள்ளைகள் கல்லூரியின் சட்ட திட்டங்களுக்கு அடங்கித்தான் இருக்க வேண்டுமே தவிர சண்டை விளைவிப்பதோ, கலகம் செய்வதோ கூடாது.

பெரியார், விடுதலை 09.12.1958

தொகுப்பு - வி.சி.வில்வம்

முதலில் மாணவர்கள் ஆசிரியருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அடுத்து ஒழுங்குமுறை பழக வேண்டும். அதற்கு அடுத்தாற் போல்தான் பாடம் படிப்பதாகும்



பெரியார், விடுதலை 15.09.1962

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆசிரியர் என்பவர்கள் இயற்கை அறிவு பெற்றவராக, அதில் மேம்பட்டவராக, உலக அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும்.

பெரியார், விடுதலை - 02.01.1950

கர்ப்பக் கிரகத்திற்குள் பார்ப்பான் தவிர வேறு யாரும் போகக் கூடாது என்பது, மக்கள் சமுதாயத்திற்கு அவமானமாகும்.

பெரியார், விடுதலை - 24.11.1969

தொகுப்பு - வி.சி.வில்வம்

மனிதனுக்கு ஒரு அறிவு அதிகம் இருந்து என்ன பயன்? மிருகங்களுக்கு ஒரு அறிவு குறைவு என்றாலும் ஜாதி இல்லையே?

பெரியார், விடுதலை - 08.07.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்



ஒரு சமூகத்திற்குச் சுயமரியாதை வேண்டுமானால் தொழிற் கல்வி மிக அவசியம்.

பெரியார், குடிஅரசு - 16.01.1927

தொகுப்பு - வி.சி.வில்வம்

தெய்வம் உள்ளவரை
மதம் இருந்துதான்
தீரும்.
மதம் உள்ளவரை
ஜாதி இருந்துதான்
தீரும்;
ஜாதி உள்ளவரை
தீண்டாமை
இருந்துதான்
தீரும்.

பெரியார், குடிஅரசு - 26.04.1936

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஜாதியை ஏற்படுத்தியவன் அதைத் தனியாக வைக்கவில்லை. அதனுடன் மதம், சாத்திரம், கடவுள் ஆகியவற்றையும் முடித்து வைத்தான். ஆகவேதான் அடிமரத்தை நாங்கள் அசைக்கிறோம்.

பெரியார், விடுதலை - 27.10.1953

சுதந்திரம், வீரம் போன்றவை ஆண்களுக்குத் தான் உண்டு என, ஆண் மக்கள் முடிவு கட்டி வைத்திருக்கிறார்கள்.

பெரியார், குடிஅரசு - 12.08.1928

DK IT WING

நமது இலக்கியங்கள் யாவும் பெண்களுக்கு ஒரு நியாயம், ஆண்களுக்கு ஒரு நியாயம் என எழுதி வைத்துள்ளன.

பெரியார், விடுதலை - 01.06.1968

தொகுப்பு - வி.சி.வில்வம்

பெண்கள் அலங்கரித்துக் கொள்வதில் ஆர்வம் காட்டக் கூடாது. ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும்.

பெரியார், விடுதலை - 11.10.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

பெண்களுக்குப் பொதுச் சேவையில் பிரியம் என்றால் அதற்கு தாராளமாக வசதி செய்து கொடுங்கள்.

பெரியார், குடிஅரசு - 02.11.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

பத்தினி, பதிவிரதை என்ற சொற்கள் முட்டாள்தனத்தில், மூர்க்கத்தனத்தில் தோன்றிய சொற்கள். இச்சொற்கள் தமிழ்ச் சொற்களும் அல்ல.

பெரியார், விடுதலை – 04.05.1973

தொகுப்பு - வி.சி.வில்வம்

வாழ்க்கைத் துணை நல ஒப்பந்தம் என்பது ஒரு பெண்ணும், ஒரு ஆணும் சேர்ந்து உலக வாழ்வு வாழ்வதற்கு ஏற்படுத்திக் கொள்கிற ஓர் ஒப்பந்தம் ஆகும். (காண்ட்டிராக்ட்)

பெரியார், விடுதலை - 22.07.1953

சீர்திருத்தத் திருமணத்தில் மனிதனின் தன்மானமும், புரோகிதத் திருமணத்தில் மூடநம்பிக்கை, ஜாதி, பெண்ணடிமையும் பாதுகாக்கப்படுகிறது.

பெரியார், விடுதலை - 19.06.1966

தொகுப்பு - வி.சி.வில்வம்

நாம் கல்யாணம், திருமணம் என்று சொல்கிறோம். பார்ப்பனர்கள் தாராமுகூர்த்தம், கன்னிகாதானம் என்று சொல்கிறார்கள்.

பெரியார் (வாழ்க்கைத் துணை நலம் நூலில்)

தொகுப்பு - வி.சி.வில்வம்

திருமணம் என்பது இடைக் காலத்தில் ஏற்பட்டது. தன் சொத்தை அனுபவிக்க ஒரு பிள்ளை வேண்டும், அதுவும் தனக்கே பிறந்திருக்க வேண்டும் என்ற பிறகே குடும்ப வாழ்க்கை ஏற்பட்டிருக்க வேண்டும்.

பெரியார், குடிஅரசு - 21.07.1945

விளக்கு ஏற்றுவது இருளைப் போக்க என்று ஆசிரியர்கள் கூற வேண்டும். விழுந்து கும்பிடு எனக் கூறக் கூடாது.



பெரியார், விடுதலை – 01.12.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

தாலி என்பது, நாய்க்கு முனிசிபாலிட்டி பட்டை போன்றது. பெண்களை அடக்கி ஆளும் மூர்க்கத்தனத்தின் சின்னம் அது!

பெரியார், விடுதலை - 10.06.1964

திருமணம் ஆனவன் என்பதைக் குறிக்க ஆணுக்குத் தாலி இல்லாத போது, பெண்ணுக்கு மட்டும் ஏன் வேண்டும்?

பெரியார், விடுதலை - 15.07.1950

தொகுப்பு - வி.சி.வில்வம்

திருமணத்தில் தாலி கட்டினாலும் கூட, பார்ப்பான் இல்லாத திருமணத்தை, சுயமரியாதைத் திருமணம் என்று சொல்வேன்.

பெரியார், குடிஅரசு – 16.12.1944

தொகுப்பு - வி.சி.வில்வம்

அமெரிக்காவில் ஒரு பெண்மணி 10 ஆயிரம் மைல் வேகத்தில் பூமியைச் சுற்றுகிறார். நம் நாட்டில் பிள்ளை பெறுவதற்காக, பெண்கள் அரச மரத்தைச் சுற்றுகின்றனர்.

பெரியார், விடுதலை – 14.06.1968

தொகுப்பு - வி.சி.வில்வம்

தன் ஜாதிக்காரன் திருடுகிறான், பொய் பேசுகிறான். அவர்களை இவர்கள் இகழ்வதில்லை! ஜாதி விட்டு கல்யாணம் செய்தால் மட்டும் தள்ளி வைக்கிறார்கள்.

பெரியார், குடிஅரசு - 20.12.1936

தொகுப்பு - வி.சி.வில்வம்

வயது வந்த ஓர் ஆணும், பெண்ணும் வாழ்க்கையில் பிரவேசிப்பதற்காக, தங்களுக்குள் செய்து கொள்ளும் ஒப்பந்த வினையைத்தான் திருமணம் என்கிறோம்.

பெரியார், விடுதலை – 17.02.1951

தொகுப்பு - வி.சி.வில்வம்

நாள், நட்சத்திரம் பார்த்து செய்யும் திருமணத்தைவிட, வசதிப்பட்ட நேரத்தில் திருமணம் செய்தவர்கள் என்ன கெட்டுவிட்டார்கள்?

பெரியார், விடுதலை – 28.11.1972

தொகுப்பு - வி.சி.வில்வம்

கோவில்கள், சிலைகள் என்பவை இந்துக்கள் என்பவர்களுக்குப் பொதுவான இடங்களே தவிர, எந்த ஜாதிக்கும் தனி உடைமை அல்ல.

பெரியார், விடுதலை – 24.11.1969

தொகுப்பு - வி.சி.வில்வம்

காதலும், கடவுளும் ஒன்றுதான். ஏனெனில் காதலும் பொய், கடவுளும் பொய்.

பெரியார், விடுதலை – 24.05.1947

தொகுப்பு - வி.சி.வில்வம்

வாழ்க்கைத் துணை
விசயத்தில் காதல்
மட்டும் போதாது.
அறிவு, அன்பு,
பொருத்தம்,
அனுபவம் ஆகிய
பலவும் முக்கியம்.

பெரியார், குடிஅரசு - 17.11.1940

தொகுப்பு - வி.சி.வில்வம்



படிப்புக்கும், அறிவிற்கும் சம்பந்தம் இல்லை. படிப்புக்கும், ஒழுக்கத்திற்கும் சம்பந்தமில்லை.

பெரியார், விடுதலை – 19.01.1958

தொகுப்பு - வி.சி.வில்வம்

காதலர் வாழ்வு மறைந்து கணவன் மனைவி வாழ்வு வந்ததும், பெண்களின் சுதந்திரம் மறைந்து விடுகிறது.

பெரியார், விடுதலை – 17.06.1969

தொகுப்பு - வி.சி.வில்வம்

காதல் என்பதே
பொருளற்ற வார்த்தை
என்பேன். அதில்
ஆசை அல்லது
தேவை என்பதைத்
தவிர வேறு எதுவும்
இல்லை.

பெரியார், குடிஅரசு – 30.06.1940

தொகுப்பு - வி.சி.வில்வம்

விதவைத் தன்மையை அனுமதிக்கும் சமூகம் மற்றொரு விதத்தில் விபச்சாரத் தன்மையைத் தூண்டவும், அனுமதிக்கவும் செய்கின்ற சமூகம் என்றுதான் சொல்ல வேண்டும்.

பெரியார், குடிஅரசு - 28.04.1935

தொகுப்பு - வி.சி.வில்வம்

விதவைத் தன்மையைத் தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும் என்பது எனது வெகு நாளைய அபிப்பிராயம்.

பெரியார், குடிஅரசு - 28.04.1935

தொகுப்பு - வி.சி.வில்வம்

காதல் சுதந்திரம், கல்யாண ரத்து, விதவை மணம் ஆகிய மூன்றும் இருந்தால், நாட்டில் விபச்சாரம் தானாகவே குறைந்துவிடும்.

பெரியார் விடுதலை – 17.09.1964

தொகுப்பு - வி.சி.வில்வம்

முதலில் நாங்கள் மனிதர்கள், பிறகுதான் இந்தியர்கள் என்று சுயமரியாதை இயக்கம் சொல்கிறது

பெரியார், குடிஅரசு – 13.04.1930

தொகுப்பு - வி.சி.வில்வம்

சுயமரியாதை இயக்கம் வெறும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது அல்ல. அனைத்து மதத்திற்கும் எதிரானது.

பெரியார், குடிஅரசு - 13.04.1930

சுயமரியாதைக்காரர்கள் கடவுளை ஒழிப்பதில்லை. என்றைய தினம் மனிதனுக்கு ஆராய்ச்சி, அறிவு ஏற்பட்டதோ அன்றே கடவுள் செத்துப் போய்விட்டது.

பெரியார், குடிஅரசு - 13.04.1930

DK IT WING

தோல்வி, புத்தியைக் கற்பிக்கிறது. வெற்றி ஆணவத்தையும், மயக்கத்தையும் கற்பிக்கின்றது.

பெரியார், குடிஅரசு - 13.04.1930

ஆரியத்தின் கடைசி மூச்சு நிற்கும் வரை, திராவிடர் இயக்கம் இருந்தே தீரும்.

பெரியார், விடுதலை – 30.03.1950

தொகுப்பு - வி.சி.வில்வம்



ஒரு மனிதன் தகுதி, திறமை பெற பள்ளிக்கு வருகிறான். என்றால், பள்ளிக்கு வரவே தகுதி, திறமை வேண்டும் என்பது எவ்வளவு அயோக்கியத்தனம்?

பெரியார், விடுதலை 02.03.1966

தொகுப்பு - வி.சி.வில்வம்

திராவிடர் கழகத்தின் முதலாவது கொள்கை எந்த மனிதனும் எனக்குக் கீழானவன் அல்ல; எவனும் எனக்கு மேலானவனும் அல்ல.

பெரியார், விடுதலை – 23.10.1958

தொகுப்பு - வி.சி.வில்வம்

எங்களுடைய லட்சியம் எதைச் செய்தாவது, என்ன செய்தாவது மனிதனை மனிதனாக்க வேண்டும் என்பதுதான்.

பெரியார் விடுதலை – 09.01.1971

தொகுப்பு - வி.சி.வில்வம்

இந்தியாவிலேயே பார்ப்பனர் ஆதிக்கத்தை ஒழிக்க நினைப்பது திராவிடர் கழகம் மட்டும்தான்.

DK IT WING

பெரியார் விடுதலை – 11.09.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

மற்ற எவரும் பேசப் பயப்படுவதை, எங்கள் இயக்கம் துணிந்து பேசுகின்றது.

பெரியார், விடுதலை - 21.03.1965

தொகுப்பு - வி.சி.வில்வம்

கருப்புச் சட்டைப் படை என்பது மற்ற படைகளைவிட, மக்கள் கவனத்தை அதிகம் கவர்ந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை.

பெரியார், குடிஅரசு – 17.11.1945

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆங்கிலேயர்கள் இருந்த இடத்தில் திராவிடர்கள் அமர வேண்டும். ஆரியர்கள் அரியாசனத்திலும், அதிகாரியாகவும் இருக்கக் கூடாது

பெரியார், குடிஅரசு – 24.08.1946

தொகுப்பு - வி.சி.வில்வம்

எங்கள் கருத்து ஒரு
பார்ப்பனர் கூட
மேல்ஜாதி என்பதாக
இருக்கக் கூடாது.
தவிர அவர்கள்
பணக்காரர்களாகவும்,
நல்வாழ்வும்
வாழ்வதிலும் நமக்குத்
தடையேதும் இல்லை.

பெரியார், குடிஅரசு - 10.04.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

முட்டாள்தனம் என்றால் சுலபத்தில் தீப்பிடித்துக் கொள்ளும். அறிவு அவ்வளவு சீக்கிரத்தில் தீப்பிடிக்காது.

பெரியார், விடுதலை - 17.05.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

அறிவு இருப்பவர்களுக்கு மதம் கிடையாது!

அறிவு இருப்பவர்களுக்கு கடவுள் கிடையாது!

அறிவு இருப்பவர்களுக்கு ஜாதி கிடையாது!

பெரியார் விடுதலை - 01.04.1966

படிப்பு வேறு;
அறிவு வேறு.
அறிவாளி எதையும்
சிந்தித்து
உணருவான்.
படித்தவன்,
படித்ததையே
வைத்துக் கொண்டு
வாந்தி எடுப்பான்.

DK IT WING

பெரியார், விடுதலை – 20.06.1966

தொகுப்பு - வி.சி.வில்வம்

மார்க்கை வைத்து கெட்டிக்காரத்தனம், சோம்பேறித்தனம், யோக்கியன், அயோக்கியன், அறிவாளி, மடையன் என எதையும் கண்டுபிடிக்க முடியாது.

பெரியார்,விடுதலை – 16.03.1968

தொகுப்பு - வி.சி.வில்வம்

பகுத்தறிவு என்பது அன்றன்றைய கருத்திற்கு ஏற்ப, நடப்பிற்கேற்ப நம்மை மாற்றிக் கொள்வதுதான்.

பெரியார், விடுதலை - 11.07.1969

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஒரு காலத்தில்
உலகத்திற்கே
நாகரிகத்தைக் கற்றுக்
கொடுத்த மக்களை
இன்று கல்லையும்,
சாணியையும்
கடவுளென்று கருத
வைத்துவிட்டான்.

பெரியார், விடுதலை – 03.05.1954

தொகுப்பு - வி.சி.வில்வம்

நாட்டில் ஒரு கூட்டத்தைப் பகுத்தறிவுவாதிகள் என்றும், மற்ற ஒரு கூட்டத்தை நம்பிக்கைவாதிகள் என்றும் கூற வேண்டும்.

பெரியார், விடுதலை - 22.07.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

கடவுளும், மதமும் அறிவற்றவர்களைத் தான் வெறியர்களாக ஆக்கும். பகுத்தறிவாதிகள் பக்கம் எட்டிக் கூடப் பார்க்காது.

பெரியார், விடுதலை – 21.09.1973

தொகுப்பு - வி.சி.வில்வம்

அறிவுதான் மிகடவுள்
என்பான் பண்டிதன்.
ஆனால் அவன்
கற்பிக்கிற கடவுள்,
உலகில் உள்ள எல்லா
அயோக்கித்தனங்களும்
கொண்டதாக இருக்கும்.

பெரியார், விடுதலை – 19.01.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

நமது கண் பார்வை எட்டும் அளவிற்கு நமக்குப் பார்க்க முடியும். அதுபோலவே நம் மனோசக்திக்கு இயன்ற அளவிலே நம்மால் சிந்திக்க முடியும்.

பெரியார், குடிஅரசு – 03.05.1936

தொகுப்பு - வி.சி.வில்வம்

எந்தக் காரியத்திற்கும் ஒருவரை மன்னித்துவிடலாம். ஆனால் அறிவைக் கெடுக்கும் காரியம் என்றால், அதை மன்னிக்கவே முடியாது.

பெரியார், விடுதலை – 25.10.1968

ஆரிய விஷம் உடலில் ஊறிப் போயிருக்கிறது. அதைத் தெளிய வைக்க பகுத்தறிவு 'இஞ்சக்சன்' போட வேண்டும்.

பெரியார், குடிஅரசு - 10.02.1945

தொகுப்பு - வி.சி.வில்வம்

பகுத்தறிவாளர் கழகம் என்றால், மனிதர்கள் கழகம் என்றே பொருள்.

பெரியார், விடுதலை - 16.11.1971

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழனுக்குப் புத்தியிருந்தால் காபி கடையில் எச்சைக் கிண்ணம் கழுவும் பார்ப்பானை ஸ்வாமி என்று கூப்பிடுவானா?

பெரியார், குடிஅரசு – 11.08.1935

தொகுப்பு - வி.சி.வில்வம்

திதி, நட்சத்திரம், குறி, தர்ப்பையை காட்டி நான்கணா வாங்கி வயிறு கழுவியவனின் மகன் அய்க்கோர்ட் நீதிபதியாகிறான்.

பெரியார், விடுதலை - 25.10.1953

பகுதி 02



தந்தை பெரியார் பொன்மொழிகள்!

தொகுப்பு

வி.சி.வில்வம்

தொகுப்பு - வி.சி.வில்வம்

திராவிடர்கள் என்றால் பார்ப்பனர்களைத் தவிர்த்து சூத்திரர்கள், பஞ்சமர்கள், நீசர்கள் என்பவர்களையே குறிக்கிறது.

பெரியார், விடுதலை - 30.07.1951

தொகுப்பு - வி.சி.வில்வம்

தனக்குக் கீழ் உள்ள தமிழர்களுக்கு உதவ வேண்டும், மேல் நிலைக்குக் கொண்டு வர வேண்டும் எனத் தமிழர்கள் நினைப்பதில்லை.

பெரியார், விடுதலை – 11.09.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

இந்து உணர்ச்சி மங்கி,
திராவிட உணர்ச்சி வேரூன்ற
வேண்டும். இந்து, இந்தியா,
இந்தியர் என்பதை ஆரியர்,
ஆரியம், ஆரியநாடு என்று
கருதி ஒதுக்க வேண்டும்.

பெரியார், குடிஅரசு - 03.06.1944

தொகுப்பு - வி.சி.வில்வம்



இங்கிலீஷை கொண்டு வந்து பரப்பியவர்கள் ஆரியர்கள், பயன் அடைந்தவர்களும் ஆரியர்கள். இங்கிலீஷை புகுத்த உத்தரவு போட்டது பிரிட்டிஷார். ஆதலால் தமிழர் பள்ளியில் இங்கிலீஷ் புகுந்ததற்கு தமிழர்கள் பொறுப்பாளிகள் அல்ல.

பெரியார், குடிஅரசு - 29.05.1938

தொகுப்பு - வி.சி.வில்வம்

சமுதாயத் துறையில்
அரசியலை மறந்து
ஆரியரோடு போர்
தொடுத்தால் சமுதாய
இழிவு நீங்கிவிடும்.
பொருளாதாரத் துறையில்
அரசியலை மறந்து
வடநாட்டானோடு போர்
தொடுத்தால் சுரண்டல்
நீங்கிவிடும்.

பெரியார், குடிஅரசு – 17.02.1945

தொகுப்பு - வி.சி.வில்வம்

திராவிடம் என்பது நாமாக ஏற்படுத்திய கற்பனைச் சொல் அல்ல. அது நம் நாட்டையும், மக்களையும் குறிப்பிடும் சரித்திர சம்பந்தமான பெயராகும்.

பெரியார், குடிஅரசு – 14.07.1945

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆரியர்கள் பிறவி உயர்வாகவும், திராவிடர்கள் பிறவி இழிவாகவும் இருப்பது மக்களுக்குத் தென்படாததும், தென்பட்டாலும் சிந்திக்க அவசியம் இல்லாமலும் இருக்கிறார்கள்.



பெரியார், குடிஅரசு - 14.07.1945

தொகுப்பு - வி.சி.வில்வம்

**ஆரியம் என்றால்
மாற்றத்திற்கு
இடமில்லாதது.
திராவிடம் என்றால்
மாற்றிக் கொள்ள
இடமளிப்பது என்பதே
உண்மைத்
தத்துவமாகும்.**

- பெரியார், குடிஅரசு - 14.07.1945

தொகுப்பு - வி.சி.வில்வம்

காலித்தனத்தில் ஆரியன் எவனாவது சிக்கிக் கொள்கிறானா? திராவிடன் கையில் சாணி உருண்டையையும், கல்லையும் கொடுத்து திராவிடன் மீதே எறியச் சொல்லி, வேடிக்கைப் பார்க்கிறான்.

பெரியார், குடிஅரசு - 22.06.1946

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆரியனை மதகுருவாகவும், அரசியல் குருவாகவும் கருதி அவன் பின்னால் திரிவதைவிட, ஒரு சமூகத்துக்கு வேறு என்ன மானக்கேடு இருக்கப் போகிறது?

பெரியார், குடிஅரசு - 10.01.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்



இராமகிருஷ்ணரை
போற்றும் அன்பனே!
சிந்தித்துப் பார். உன்
வடலூர் இராமலிங்கம்
எந்த விதத்தில்
அவரைவிட தாழ்ந்தவர்?
அவரை எந்த
வடநாட்டானாவது
போற்ற கண்டுள்ளாயா?

பெரியார், குடிஅரசு - 08.05.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

உன்னுடைய ஒரு நாயன்மாரையாவது வட நாட்டானுக்குத் தெரியுமா? கபிலன் கூறியது என்னவென்று நீ அறிவாயா? ஏன் தம்பி உனக்கு இவ்வளவு வடநாட்டு ஆரியப்பற்று?



பெரியார், குடிஅரசு – 08.05.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

இன உணர்வு கொண்டெழு தம்பி! உன் இனத்தான் எந்த விதத்திலும் அறிவிலோ, ஆற்றலிலோ தாழ்ந்தவன் அல்ல என்பதை இன்றே உணர்வாய்!

பெரியார், குடிஅரசு – 08.05.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

இந்தியாவில் அங்கீகரிக்கப்பட் 14 மொழிகளில் சமஸ்கிருதமும் ஒன்று என சர்வ ஜாக்கிரதையாக எழுதி வைத்துக் கொண்டனர் பார்ப்பனர்கள். சமஸ்கிருதம் பேசுபவர்கள் இந்தியாவிலேயே மொத்தம் 441 பேர்தான்.

பெரியார், விடுதலை - 15.02.1960

சமஸ்கிருதம்
பேசுகிறவர்கள் சுமார்
500 பேர் இருப்பதாக
இந்திய ஆட்சி
மொழிக் கமிஷன்
ரிப்போர்ட் கூறுகிறது.
இதுவே அதிகம்

பெரியார், விடுதலை - 15.02.1960

தொகுப்பு - வி.சி.வில்வம்

சமஸ்கிருதம் பேசும் வழக்கத்தில் இல்லாததால், அதைக் கற்கும்படி வற்புறுத்த இயலாமல் போய்விட்டார்கள்.

பெரியார், விடுதலை - 16.01.1950

தொகுப்பு - வி.சி.வில்வம்

வட மொழி நம் பகுத்தறிவை அடிமைப்படுத்தியது. ஆனால் ஆங்கிலம் எதையும் சிந்தித்துப் பார்க்கும்படி செய்தது.

பெரியார், விடுதலை – 05.01.1968

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆங்கிலேயன் சந்திரக் கிரகத்தில் ஒலி கேட்கிறான். வட மொழியான் ஈரேழு பதினான்கு லோகங்களைக் காட்டித் திவச மந்திரம் படிக்கிறான்.

பெரியார், விடுதலை - 05.01.1968

தொகுப்பு - வி.சி.வில்வம்

திவசம், கல்யாணம், மோட்சம், நரகம் என்கிற வார்த்தைகள் தமிழா? வடமொழியா? கன்னிகாதானம் என்பதற்குத் தமிழ் வார்த்தை ஒன்று கண்டு பிடியுங்களேன்.

பெரியார், விடுதலை - 10.04.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

சமஸ்கிருதத்தின் மூலம் புகுத்த முடியாமல் போன பித்தலாட்டக் கருத்துகளை அதன் வழிமொழியான இந்தியின் மூலம் புகுத்த முற்படுகிறார்கள். அரசியல் ஆதிக்கத்தின் உதவியால் இந்தியைப் புகுத்தலாம் என நினைக்கிறார்கள்.

பெரியார், விடுதலை - 16.01.1950

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பனர்கள் செத்த பாம்பான சமஸ்கிருத்தை வைத்துக் கொண்டு எவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

பெரியார், விடுதலை - 28.06.1964

தொகுப்பு - வி.சி.வில்வம்



பொங்கல் விழா தமிழர்களிடையே ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து, இன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

பெரியார், விடுதலை - 19.01.1949

தொகுப்பு - வி.சி.வில்வம்

நம் நாடு அறிவுப் பெருக்கத்தின் இருப்பிடமாய் இருந்தது. பிராமண மதம் புகுந்து அபத்தமான கட்டுக்கதை மற்றும் சாஸ்திரங்களைப் புகுத்தி மக்களை வீணடித்து விட்டார்கள்.

பெரியார், குடிஅரசு - 08.08.1937

தொகுப்பு - வி.சி.வில்வம்

இங்கிலீஷின் உதவியால் ஆட்சி ஆதிக்கத்தைக் கைப்பற்றிய ஆரியர்கள், தங்களைத் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் என்று கருதி இந்தியைப் புகுத்தப் பார்க்கிறார்கள்.

பெரியார், குடிஅரசு - 29.05.1938

தொகுப்பு - வி.சி.வில்வம்

ராஜாஜி ஆட்சிக்கு வந்த பத்தே நாளில் தமிழ்நாட்டில் சமஸ்கிருதம் படிக்க வேண்டும் என்றார். இதை ஒரு தமிழ்ப் பண்டிதரும் ஆட்சேபிக்கவே இல்லை.

பெரியார், குடிஅரசு - 08.08.1937

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஜாதி என்ற வடமொழிச் சொல்லைத் தமிழிலிருந்து எடுத்துவிட்டால், அதற்குச் சரியான தமிழ்ச்சொல் ஒன்றைக் கூறுங்களேன். பண்டிதர்கள் தான் கூறட்டுமே.

பெரியார், விடுதலை - 10.04.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

உள்ளே இருப்பது குழவிக்கல் என்பது எல்லோருக்கும் தெரியும். அதற்குத் தமிழில் சொன்னால் என்ன? சாமி செத்தா போகும்

பெரியார், விடுதலை - 05.05.1957

தொகுப்பு - வி.சி.வில்வம்

எங்களை ஆள எங்கள் நாட்டில் அறிவாளிகள் உண்டு. எங்கள் நாட்டில் வல்லமை படைத்த போர் வீரர்கள் உண்டு. நாங்கள் ஆண்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆதலால், எங்களுக்குத் தனித்திருக்க சகல வசதிகளும் உண்டு.

பெரியார், விடுதலை – 19.01.1948



தொகுப்பு - வி.சி.வில்வம்

உலகிலேயே இந்த நாடுதானே, பிழைக்க வந்தவன் தன்னை உயர்ந்தவன் என்றும், நாட்டுக்குச் சொந்தக்காரர்களை இழி மக்கள் என்றும் கூறுவதைப் பொறுத்துக் கொண்ட நாடாகும்.

பெரியார், விடுதலை – 02.07.1960

ஒருவன் தன் நாடு சுதந்திரமாக இருக்க வேண்டும் எனப் பாடுபட்டால் அது எப்படி தப்பாகும்? இந்தக் கிளர்ச்சியில் ஈடுபடாமல் போனால் நாம் கோழைகளாக, மானமற்ற மக்களாக இருக்கிறோம் என்பது தானே பொருள்.

பெரியார், விடுதலை - 21.11.1973

மாநில சுயாட்சி கேட்டு மத்திய அரசிடம் கெஞ்சுவது என்பது, ஒருவர் ஒரு படி மிளகை அடுத்த வீட்டுக்காரரிடம் கொடுத்துவிட்டு, ஒரு குவளை ரசத்திற்குப் பிச்சைக் கேட்பது போல் இருக்கிறது.

பெரியார், விடுதலை - 28.01.1972

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழர்களின் வரிப் பணத்தைக் கொண்டே தமிழர்களின் மொழி, கலை, நாகரிகம் ஆகியவற்றைக் கெடுக்கும் வடமொழி பாஷையை, அதே தமிழர்கள் மீதே சுமத்துவது எவ்வளவு பெரிய அக்கிரமம்?



பெரியார், குடிஅரசு - 30.10.1938

தொகுப்பு - வி.சி.வில்வம்

பொங்குக பொங்கல் ! பொங்குக தமிழ் மக்கள் மானமும் ! அறிவும் !

பெரியார், விடுதலை - 19.01.1949

தொகுப்பு - வி.சி.வில்வம்

**தமிழ்நாடு என்றும்
தமிழ் மக்களுக்கே
இருக்க வேண்டும்.
ஆரியர்களான
அய்யரோ,
அய்யங்காரோ,
சாஸ்திரியோ, சர்மாவோ
தமிழ்நாடு குறித்துப்
பேச உரிமை இல்லை**

பெரியார், குடிஅரசு - 30.10.1938

இப்பொழுது நாம் கேட்பதெல்லாம் எங்கள் கலையின் மீதும், நாகரிகத்தின் மீதும், பொருளாதாரத்தின் மீதும் வேறு எந்த மாகாணமும் ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்பதேயாகும்.

பெரியார், குடிஅரசு - 17.12.1939

தொகுப்பு - வி.சி.வில்வம்

திராவிட நாட்டில் புகுந்த ஆரியன் ஸ்வாமி ஆகிவிட்டான். பணம் திரட்ட வந்த மார்வாடி சவுக்கார் சேட்டு ஆகிவிட்டான். இருவருக்கும் உதவி செய்த தமிழன் அடிமை ஆகிவிட்டான்.

பெரியார், குடிஅரசு – 09.02.1946

தொகுப்பு - வி.சி.வில்வம்

ராஜாஜி தமிழராக இருந்திருந்தால் இந்தியைத் திணித்திருப்பாரா? சத்தியமூர்த்தி தமிழராக இருந்திருந்தால் சமஸ்கிருதத்தைக் கட்டாயமாக்குவேன் என்பாரா?

பெரியார், குடிஅரசு – 07.01.1940

தொகுப்பு - வி.சி.வில்வம்



இந்தியர்கள் அனைவரும் ஒரே குடும்பம் அல்ல, ஒரு தாய் வயிற்றுப் பிள்ளையும் அல்ல. நாம் வேறு வேறு!

பெரியார், குடிஅரசு - 28.04.1940

சமஸ்கிருத மொழியால் தமிழ்நாடு எவ்வளவு தொல்லையும், மடமையும், இழிவும் அனுபவிக்கிறது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

பெரியார், விடுதலை - 05.08.1963

தொகுப்பு - வி.சி.வில்வம்

பிராமணாள் என்பதை
எவ்வளவு இழுக்கென்று
கருதுகிறோமோ,
அதுபோலவே கோவிலில்
ஓதும் சமஸ்கிருத
மொழியையும்
கருதுகிறோம்.

பெரியார், விடுதலை – 05.05.1957

தொகுப்பு - வி.சி.வில்வம்

இந்தியர்களைக்
குருட்டு
நம்பிக்கைகளுக்கு
ஆளாக்கியது
தேவபாஷை எனும்
சமஸ்கிருதமே.
சமஸ்கிருதத்தின்
வழிமொழியான
இந்தியும்
அத்தகையதே.

பெரியார், குடிஅரசு – 16.04.1939

தொகுப்பு - வி.சி.வில்வம்

கல்யாணப் பத்திரிகையை ஒரு ஆங்கிலேயர் ஆங்கிலத்திலும், பிரெஞ்சுக்காரர் பிரெஞ்சு மொழியிலும், ஜப்பானியர் ஜப்பானிய மொழியிலும் எழுதுகிறார்கள். தமிழன் மட்டும் தான் சமஸ்கிருதம் கலந்து எழுதுகிறான்.

பெரியார், குடிஅரசு - 08.09.1940

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆலயம் என்பதற்குத் தமிழில் வார்த்தையே இல்லை. கோவில் என்றால் அரண்மனையே ஒழிய ஆலயம் அல்ல.

பெரியார், குடிஅரசு – 27.10.1940

தொகுப்பு - வி.சி.வில்வம்

பொங்கல் விழா மட்டும் தான் தமிழர் விழா எனச் சுயமரியாதை இயக்கம் தொடர்ந்து கூறி வருகிறது !

பெரியார், விடுதலை - 19.01.1949

தொகுப்பு - வி.சி.வில்வம்

இறந்துபட்ட சமஸ்கிருதம் புழுத்த புழுக்களில் ஒன்றுதான் இந்த இந்தி மொழி. சமஸ்கிருதத்தால் நாடு பெற்ற சீரழிவுக்குக் குறையாதபடி, இந்தி மொழி ஆதிக்கமும் இருக்கும்.

பெரியார், குடிஅரசு - 17.09.1949

தொகுப்பு - வி.சி.வில்வம்



திருவள்ளுவர் மக்களுடைய நடப்புக்கான கொள்கைகளை விளக்கினார். புத்தர் மக்களின் எண்ணத்துக்கும், உள்ளத்துக்கும் கொள்கைகளை வகுத்தார்.

பெரியார், விடுதலை – 07.02.1954

தொகுப்பு - வி.சி.வில்வம்

குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல், சமூகம், பொருளாதார ஞானம் ஆகிய சகலமும் அதில் உள்ளது.

பெரியார், குடிஅரசு – 13.11.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

நீங்கள் என்ன சமயத்தார் என்று கேட்டால் வள்ளுவர் சமயம் என்று சொல்லுங்கள். உங்கள் நெறி என்னவென்றால் குறள் நெறி என்று கூறுங்கள்.



பெரியார், விடுதலை – 18.04.1950

தொகுப்பு - வி.சி.வில்வம்

குறளை விட
கீதையில் என்ன
அதிகமான நீதியும்,
சுயமரியாதையும்
அடங்கிக்
கிடக்கிறது என்பது
நமக்கு
விளங்கவில்லை.

பெரியார், குடிஅரசு - 04.09.1927

இராமாயணத்தால் அறிவு மழுங்கும்; குறளால் அறிவு பெருகும்.



பெரியார், விடுதலை – 02.01.1955

நம் தமிழ்மொழி தாய்மொழி என்ற மட்டிலும் அல்லாமல், எல்லா வளப்பங்களும் கொண்ட சிறந்த மொழி, இந்தியாவிலேயே பழமை வாய்ந்த பண்பட்ட மொழியாகும்.

பெரியார், விடுதலை – 20.06.1959

தொகுப்பு - வி.சி.வில்வம்

அந்தந்த நாட்டில் அந்தந்த மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டும். அந்தந்த நாட்டு மொழியிலேயே சர்க்கார் நடக்க வேண்டும்.

பெரியார், விடுதலை – 14.07.1955

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழில் மதம்
சம்பந்தமான
இலக்கியம் தான்
அதிகம் இருக்கிறது.
தமிழ் இலக்கணம் கூட
மதத்தோடு
தொடர்புடையதாய்
இருக்கிறது.

பெரியார், குடிஅரசு – 26.01.1946

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழையும், மதத்தையும் பிரிக்க வேண்டும். தமிழுக்கும், கடவுளுக்கும் உள்ள தொடர்பையும் நீக்க வேண்டும்.

பெரியார், குடிஅரசு - 26.01.1936

தொகுப்பு - வி.சி.வில்வம்

பொங்கல் விழாவால் ஏற்பட்ட பயன், நம்மவர்கள் ஆரியத்தை வெறுக்கும் உணர்ச்சிக்கு, பொங்கலைப் பயன் படுத்திக் கொண்டது தான் !

பெரியார், விடுதலை - 19.01.1949

தொகுப்பு - வி.சி.வில்வம்

கோயிலில் தமிழில் மந்திரம் சொல்லாமல், சமஸ்கிருதத்தில் மந்திரம் சொல்லப்படுகிறதே? இதை ஏன் யாரும் ஆட்சேபிக்கவில்லை?



பெரியார், விடுதலை - 21.03.1965

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழர்களுக்கு மொழி
தோன்றிய காலத்தில்,
கடவுள் உணர்ச்சி
இருந்து
இருக்குமானால்,
அதற்கு ஒரு தனி
வார்த்தை
இருந்திருக்கும்.

பெரியார், குடிஅரசு - 29.06.1930

தமிழ்ப் பண்டிதர்களுக்கு உலக ஞானத்தைவிட, புராண ஞானங்கள் தான் அதிகம் இருக்கின்றன.



பெரியார், குடிஅரசு - 26.01.1946

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழர்கள் கட்டிய கோயிலில், தமிழில் அர்ச்சனை செய்ய பார்ப்பான் மறுக்கிறான்.

பெரியார், விடுதலை - 12.11.1979

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமக்கென்று தாய்மொழி ஒன்று இல்லாத கூட்டம் ஆரியக் கூட்டம்!

பெரியார், குடிஅரசு - 26.06.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழைக்
காட்டுமிராண்டி மொழி
என்று சொன்னது
பொறுக்கவில்லை.
தமிழில் ஆரியம்
கலக்காத இலக்கியம்
ஒன்றைச் சொல்லுங்கள்
பார்க்கலாம்!



பெரியார், விடுதலை 02.11.1967

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழ்மொழியைக் கடவுளிடம் சொல்லக் கூடாது; நீஷ மொழி என்கிறான்! அதைப் பற்றி எவன் சிந்தித்தான், வெட்கப்பட்டான்?



பெரியார், விடுதலை – 14.12.1967

இந்தச் சிப்பாய்களைக் கேட்கிறேன். தமிழ் நீஷ மொழி, தமிழில் பேசினால் குளித்துவிட்டுத் தான் சாப்பிட வேண்டும் என்று பார்ப்பான் கூறுகிறானே, இதற்கு எவன் கோபப்பட்டான்?



பெரியார், விடுதலை – 22.09.1967

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழன் சமயத்திலும்,
அவனது பழமையை
உணர்த்தும்
இலக்கியங்களிலும்
அறிவுக்கும், வளர்ச்சிக்கும்
இடமில்லாமல்
கட்டுப்படுத்தப்பட்டு
விட்டான்.



பெரியார், விடுதலை – 15.10.1962

தொகுப்பு - வி.சி.வில்வம்

இராம, இராவணப் போரில் நம் இனத்தைக் காட்டிக் கொடுத்த விபீஷணன், அநுமார், சுக்ரீவன், அங்கதன் போல, இன்றைக்கும் பார்ப்பானுக்குக் காட்டிக் கொடுப்பவர்கள் இருக்கிறார்கள்.



பெரியார், விடுதலை – 03.10.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழ் சமுதாயத்திற்கு,
தமிழன் பண்பிற்கு,
தமிழன் வரலாற்று
நடப்பிற்கு, தமிழனின்
அறிவுப் பொருத்தத்திற்கு
ஏற்ற விழா பொங்கல்
மட்டுமே!

பெரியார், விடுதலை - 14.01.1959

தொகுப்பு - வி.சி.வில்வம்

நாய் நல்ல விசுவாசமுள்ள பிராணிதான். அது தன் நன்றியை மனிதர்களிடம் காட்டுமே ஒழிய, தன் இனத்தைச் சார்ந்த வேறொரு நாயைக் கண்டால் குலைக்கும். அது போலத்தான் தமிழர்கள் நிலையும் இருக்கிறது.



பெரியார், விடுதலை - 02.08.1969

தொகுப்பு - வி.சி.வில்வம்

நமது நாட்டில் வேறு வழியில் பிழைக்க முடியாதவர்கள் தமிழின் பெயரால் பிழைக்கத் துடிக்கிறார்கள்.



பெரியார், விடுதலை - 16.03.1967

தொகுப்பு - வி.சி.வில்வம்

கோவிலில் புகுந்து கொண்டு மணியாட்டுகின்றவன் யார்? வெளியே இருந்து குரங்குக் குட்டியைப் போல் கன்னத்தில் அடித்துக் கொள்பவன் யார்?



பெரியார், விடுதலை - 21.03.1965

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழர்கள் என்று சொன்னால் அந்த மொழி பேசுகிறவர்களைக் குறிக்கிறது. திராவிடர்கள் என்றால் பார்ப்பனர்களைத் தவிர்த்து நம்மை மட்டும் குறிக்கிறது.

பெரியார், விடுதலை - 30.07.1951

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழனுக்குப் புத்தியிருந்தால் அரிசி, பருப்பு, காய்கறியைப் பார்ப்பானிடம் கொடுத்து, இறந்து போன என் பெற்றோர்களுக்குக் கொடுங்கள் என்று சொல்லுவானா?

பெரியார் குடிஅரசு - 11.08.1935

தொகுப்பு - வி.சி.வில்வம்

மிட்டாய் தட்டை வண்டியில் வைத்து தள்ளி வயிறு பிழைத்த வடநாட்டான், நாளடைவில் ஆரியபவனுக்குச் சொந்தக்காரனாகி விடுகிறான்.

பெரியார், விடுதலை - 25.10.1953

தொகுப்பு - வி.சி.வில்வம்

பிராமணர்கள் தமிழரானால் சமஸ்கிருத மந்திரம் சொல்லி கல்யாண, இழவு சடங்குகளை நடத்துவதேன் ?

பெரியார், குடியரசு - 22.01.1939

தொகுப்பு - வி.சி.வில்வம்

தோள் மீது துணி மூட்டை தூக்கி விற்கும் வடநாட்டான் சேட், நாளடைவில் செல்லாராம் ஆகிவிடுகின்றான்.

பெரியார், விடுதலை - 25.10.1953

தமிழர்கள் பதவிக்கு வரும் வரை தான், நான் தமிழன் எனக்கு உயர் பதவி வேண்டும் என்கிறார்கள். பதவிக்கு வந்தவுடன் பார்ப்பானுக்கு அனுகூலமாக நடக்கிறார்கள்.

பெரியார், விடுதலை - 11.09.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

பிராமணர்கள் தமிழரானால் தமிழ் நூல்களையே முதல் நூல்களாகக் கொள்ள வேண்டும். தமிழே தமது குலமொழி என ஒப்புக் கொள்ள வேண்டும். தமிழைவிட சமஸ்கிருதம் உயர்ந்தது என்று சொல்லக் கூடாது.

DK IT WING

பெரியார், குடிஅரசு – 22.01.1939

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழ்நாட்டுக்கு டில்லி
ஆட்சியால் ஆக வேண்டிய
காரியம் என்ன?
டில்லிக்காரன் யார்?
தமிழன் யார்? இருவருக்கும்
என்ன சம்பந்தம்?
எதில் ஒற்றுமை?

பெரியார், விடுதலை - 25.10.73

தொகுப்பு - வி.சி.வில்வம்

பிராமணர்கள் தமிழரானால் நடை உடை பாவனைகளில் மாற வேண்டும். பூணூலை அறுத்தெறிய வேண்டும், எல்லா துறைகளிலும் தமிழர்களைப் போல நடக்க வேண்டும்.

பெரியார், குடிஅரசு – 22.01.1939

தொகுப்பு - வி.சி.வில்வம்

பிராமணர்கள் தமிழரானால் சில சடங்குகளைப் பிராமணர்கள் மட்டும் கடைப்பிடிப்பது ஏன்? எப்பொழுதும் தமிழர்களுடன் கலக்காமல் தனித்து வாழ்வதேன்?

பெரியார், குடிஅரசு – 22.01.1939

தொகுப்பு - வி.சி.வில்வம்

பிராமணர்கள் தமிழரானால் அவர்களுக்கு மட்டும் தனி சமஸ்கிருதப் பள்ளி ஏன்? அப்பள்ளியில் தமிழர்களை ஏன் சேர்ப்பதில்லை? வேதம் ஓதுவதற்கு தமிழர்களுக்கு உரிமையில்லை எனக் கூறுவது ஏன்?

பெரியார், குடிஅரசு - 22.01.1939

பிராமணர்கள்
தமிழரானால்
சமஸ்கிருதத்திற்கு
அவர்கள் உயர்வு
கற்பிப்பது ஏன்?
தமிழ் நூல்கள்
வடமொழியில் இருந்து
மொழி
பெயர்க்கப்பட்டவை எனப்
புனைந்து கூறுவதேன்?

பெரியார், குடிஅரசு - 22.01.1939

தொகுப்பு - வி.சி.வில்வம்

பிராமணர்கள் தமிழரானால் தமிழ் நூல்களன்றோ அவர்களுக்கு முதல் நூல்களாக இருக்க வேண்டும். வேத நூல்களை முதல் நூலாகவும், ஆதாரமாகவும் கொள்வதேன்?

பெரியார், குடிஅரசு – 22.01.1939

தொகுப்பு - வி.சி.வில்வம்

பிராமணர்கள் தமிழரானால் பிராமண ஹோட்டல்களில் தமிழர்கள் எல்லாம் ஒன்றாகச் சாப்பிடும் போது, பிராமணர்கள் மட்டும் தனி இடத்தில் சாப்பிடுவது ஏன்?

பெரியார், குடிஅரசு – 22.01.1939

தொகுப்பு - வி.சி.வில்வம்

பிராமணர்கள் தமிழரானால் சைவர்கள் மாநாட்டில் ஏன் கலந்து கொள்ளவில்லை? அறுபத்து மூன்று நாயன்மாரையும், பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்க சாமிகள், சைவ சமயாச்சாரியார்களை ஏன் கும்பிடவில்லை?

பெரியார், குடிஅரசு - 22.01.1939

தொகுப்பு - வி.சி.வில்வம்

பிராமணர்கள் தமிழரானால் தென்னிந்திய சிவாலயங்களில் வேத பாராயணம் செய்ய வேண்டும் என்றும், அப்புறம் தான் தேவாரம் ஓத வேண்டும் என்றும் பிடிவாதம் செய்வதேன்?

பெரியார், குடிஅரசு - 22.01.1939

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழனை சூத்திரன் என்றும், தாசி மகன் என்றும் எழுதி வைத்திருக்கும் வேதப் புத்தகத்தைக் கிழித்து, நெருப்பில் போட்டு சாம்பலாக்க வேண்டும்.

பெரியார், குடிஅரசு - 30.10.1938

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழர்களே, பார்ப்பனர்களின் இன்றைய உயர்நிலைக்குக் காரணம் நமது வீட்டுக் கல்யாணம், கருமாதி, திவசம் போன்றவையே.

பெரியார், குடிஅரசு - 16.03.1946

காட்டுமிராண்டி கூட்டங்கள் நாட்டில் புகுந்து சூறையாடிய காலத்தில் திராவிட மக்கள் உரிய பண்பாடுகளையும், தலைசிறந்த நாகரிகத்தையும் கொண்டு வாழ்ந்தார்கள்.

பெரியார், விடுதலை – 12.02.1968

தொகுப்பு - வி.சி.வில்வம்

இலக்கிய ரசிகர்களே,
இராம பக்தர்களே,
முருக பக்தர்களே,
புராண
காவியங்களுக்குப்
புதுப்பொருள்,
கருப்பொருள்,
நுண்பொருள் கண்டதால்
ஏற்பட்ட பயன் என்ன
என்று கேட்கிறேன்?

பெரியார், குடிஅரசு - 09.03.1946

தொகுப்பு - வி.சி.வில்வம்

ராஜாஜியோடு இருக்கும் தமிழர்கள் அவரைக் கைவிடமாட்டார்கள். ஆனால் காமராஜரோடு இருக்கும் பார்ப்பனர்கள் அவரை நட்டாற்றில் விடுவார்கள். அதுதான் அவர்கள் இனப்பற்று.

பெரியார், குடிஅரசு - 16.02.1946

தொகுப்பு - வி.சி.வில்வம்

மானமுள்ள தமிழர்கள் இனி தங்கள் வீட்டில் இராமன், சீதை, கிருஷ்ணன், ருக்மணி, ரங்கநாதன், கந்தன், வள்ளி, தெய்வானை, பார்வதி, பரமசிவன் முதலிய உருவப்படங்களை தொங்கவிடக் கூடாது என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

பெரியார், குடிஅரசு - 12.11.1939

தொகுப்பு - வி.சி.வில்வம்

இந்தியாவிலேயே மொழியில், கலையில், சரித்திரத்தில், சுபாவத்தில், நடை உடைகளில் எதில் எடுத்துப் பார்த்தாலும் தமிழர்கள் தனித்துவமானவர்கள்.

பெரியார், குடிஅரசு – 16.07.1939

தொகுப்பு - வி.சி.வில்வம்

அறிஞர் பா.வே.மாணிக்கனார் தமிழர்களை நாய்கள் என்றும், பார்ப்பனர்களைப் பூனைகள் என்றும் கூறினார். நாய்க்கு நன்றி இருக்கும்; பூனைக்குத் திருட்டுப் புத்தி இருக்கும் என்றார்.

பெரியார் குடிஅரசு – 11.12.1938

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பனர்களுக்குப்
பிரச்சினை என்றால்,
கன்னியாகுமரி முதல்
இமயமலை வரை உள்ள
சகல பார்ப்பனர்களும்
ஒன்று சேர்ந்து
விடுவார்கள்.
இப்படிப்பட்ட சமயத்தில்
தமிழர்களும்
விபீஷணர்களாக
மாறுவார்கள்.

பெரியார், குடிஅரசு – 03.07.1938

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பனர்களுக்கு ஏதாவது குறைபாடு வருகிறது என்றால், எதிரிகள் மீது ஒரே மூச்சில் விஷமப் பிரச்சாரம் செய்து ஒழிக்க நினைப்பார்கள்.

பெரியார், குடிஅரசு - 03.07.1938

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பானுக்குப் பைத்தியம் பிடித்தால் வெளியில் கிடக்கும் சாமான்கள் வீட்டிற்குள் போகுமே தவிர, வீட்டிற்குள் இருக்கும் சாமான்கள் ஒன்றுகூட வெளியில் போகாது.

பெரியார், குடிஅரசு - 25.09.1938

தொகுப்பு - வி.சி.வில்வம்

தன்னைத் தொட்டால் பாவம், தன் பாஷையைக் கேட்டால் தோஷம், தன்னை கோயிலுக்குள் அனுமதித்தால் தீட்டு என்கிற பார்ப்பானுடன் தமிழன் சேரலாமா?

பெரியார், குடிஅரசு - 11.08.1935

தொகுப்பு - வி.சி.வில்வம்

துரோகிகள் தோன்றிக் கொண்டே இருப்பார்கள். அவ்வளவுதான் என்று எண்ணாதீர்கள். நாளைக்கும் தோன்றுவான்; நாளை மறுநாளும் தோன்றுவான்.

பெரியார், குடிஅரசு – 15.10.1957

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழனுக்குப் புத்தியிருந்தால் காபி கடையில் எச்சைக் கிண்ணம் கழுவும் பார்ப்பானை ஸ்வாமி என்று கூப்பிடுவானா?

பெரியார், குடிஅரசு – 11.08.1935



நான் கூறுவதைப்
பொறுமையாகக்
கேளுங்கள்
என்றுதான்
கூறுகின்றேன்.
அப்படியே
நம்புங்கள் என்று
கூறவில்லை.

பெரியார், விடுதலை - 03.07.1965

பகுதி 03



தந்தை பெரியார் பொன்மொழிகள்!

தொகுப்பு

வி.சி.வில்வம்

தொகுப்பு - வி.சி.வில்வம்

நான் வெறும் அலங்காரப் பேச்சு பேசுகிறவன் அல்ல.

பெரியார், குடிஅரசு 21.09.1946

தொகுப்பு - வி.சி.வில்வம்

மதக் கட்டளையும், கடவுள் நம்பிக்கையும் கொண்ட மனிதன், ஒருநாளும் விடுதலை அடைய முடியாது...

பெரியார், விடுதலை 21.09.1957

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழரங்கம் - 2

தமிழ்நாட்டின் சிந்தனைச் சிற்பிகள்

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா & கலைநிகழ்ச்சிகள்

நிகழிடம் : ஃபுனாபொரி டவர் ஹால், ஜப்பான்
நாள் : 15.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி

சிறப்புரை

எம்.எம்.அப்துல்லா MBA., L.L.B., அவர்கள்,

மாநிலங்களவை உறுப்பினர்

தலைப்பு : அண்ணா கண்ட கனவு

ஆசிரியர் கி.வீரமணி M.A., B.L., அவர்கள்,

தலைவர், திராவிடர் கழகம்

தொகுப்பு - வி.சி.வில்வம்

நீ பட்டினியாக இருப்பது கடவுள் கொடுத்த வரம் என்றால், யார் ஏற்றுக் கொள்வார்கள்? யார் பொறுத்துக் கொள்வார்கள்?

பெரியார், விடுதலை - 10.01.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

பொங்கல் விழாவால் ஏற்பட்ட பயன், நம்மவர்கள் ஆரியத்தை வெறுக்கும் உணர்ச்சிக்கு, பொங்கலைப் பயன் படுத்திக் கொண்டது தான் !

பெரியார், விடுதலை - 19.01.1949

தொகுப்பு - வி.சி.வில்வம்

எனக்குக் கடவுள் பற்று, மதப் பற்று, நாட்டுப் பற்று, மொழிப் பற்று, ஜாதிப் பற்று எதுவுமே இல்லை. மக்களின் வளர்ச்சிப் பற்று மட்டுமே உண்டு.

பெரியார், விடுதலை - 23.03.1968

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழ் சமுதாயத்திற்கு, தமிழன் பண்பிற்கு, தமிழன் வரலாற்று நடப்பிற்கு, தமிழனின் அறிவுப் பொருத்தத்திற்கு ஏற்ற விழா பொங்கல் மட்டுமே!

பெரியார், விடுதலை - 14.01.1959

தொகுப்பு - வி.சி.வில்வம்

எங்கள் வேலை
அறுவைச் சிகிச்சைப் போன்றது.
புண்ணுக்கு மருந்து பூசி
சரிசெய்ய முடியாது.
கொடிய புண்ணாக இருப்பதால்,
கத்தி கொண்டு
அறுவைச் சிகிச்சை
செய்ய வேண்டும்.

பெரியார், விடுதலை – 30.10.1960

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழ்நாட்டுக்கு டில்லி ஆட்சியால் ஆக வேண்டிய காரியம் என்ன? டில்லிக்காரன் யார்? தமிழன் யார்? இருவருக்கும் என்ன சம்பந்தம்? எதில் ஒற்றுமை?

பெரியார், விடுதலை - 25.10.73

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பனர் அல்லாதார் ஆட்சி என்றால் நான் வலியப் போய் ஆதரித்து வந்திருக்கிறேன். இதில் நான் மான, அவமானம் பார்த்ததில்லை.



பெரியார், விடுதலை – 02.10.1967

தொகுப்பு - வி.சி.வில்வம்

காட்டுமிராண்டி
கூட்டங்கள் நாட்டில்
புகுந்து சூறையாடிய
காலத்தில் திராவிட மக்கள்
உரிய பண்பாடுகளையும்,
தலைசிறந்த
நாகரிகத்தையும் கொண்டு
வாழ்ந்தார்கள்.

பெரியார், விடுதலை – 12.02.1968

தொகுப்பு - வி.சி.வில்வம்



இந்திய அரசியல் சட்டத்தில் ஜாதிக்கும், மதத்திற்கும் பாதுகாப்பு இருக்கிறது. ஆதலால் அரசியல் சட்டத்தைக் கொளுத்தினேன்.

பெரியார், விடுதலை - 21.11.1957

தொகுப்பு - வி.சி.வில்வம்

திராவிடர்கள் என்றால் பார்ப்பனர்களைத் தவிர்த்து சூத்திரர்கள், பஞ்சமர்கள், நீசர்கள் என்பவர்களையே குறிக்கிறது.

பெரியார், விடுதலை - 30.07.1951

தொகுப்பு - வி.சி.வில்வம்

நான் சொல்லுவது கடவுள் வாக்கு. நம்பாவிட்டால் நரகம் கிடைக்கும் என வேதம், சாத்திரம், புராணம் போல சொல்ல மாட்டேன்.

பெரியார், குடிஅரசு - 11.09.1927

தொகுப்பு - வி.சி.வில்வம்

இந்து உணர்ச்சி மங்கி, திராவிட உணர்ச்சி வேரூன்ற வேண்டும். இந்து, இந்தியா, இந்தியர் என்பதை ஆரியர், ஆரியம், ஆரியநாடு என்று கருதி ஒதுக்க வேண்டும்.

பெரியார், குடிஅரசு - 03.06.1944

தொகுப்பு - வி.சி.வில்வம்

நான் தொட்டால், அருகில் சென்றால் தீட்டாகும் சாமியை வெறும் கல்லென்றும், செம்பென்றும் தான் கூறுவேன்.

பெரியார், குடிஅரசு - 04.03.1928

தொகுப்பு - வி.சி.வில்வம்



இங்கிலீஷை கொண்டு வந்து பரப்பியவர்கள் ஆரியர்கள், பயன் அடைந்தவர்களும் ஆரியர்கள். இங்கிலீஷை புகுத்த உத்தரவு போட்டது பிரிட்டிஷார். ஆதலால் தமிழர் பள்ளியில் இங்கிலீஷ் புகுந்ததற்கு தமிழர்கள் பொறுப்பாளிகள் அல்ல.

பெரியார், குடிஅரசு - 29.05.1938

தொகுப்பு - வி.சி.வில்வம்

கடவுள் மீது எனக்கென்ன கோபம்? கடவுளை ஒழித்து விட்டு, நான் கடவுளாகப் பார்க்கின்றேனா? தினமும் ரூ.100 கொடுத்து கடவுளாக இரு என்றால் நான் ஒத்துக் கொள்ள மாட்டேன். அவன் பூட்டுகின்ற போது பூட்டுவதும், திறக்கின்ற போது திறப்பதும், கழுவுவதையும் யார் ஒத்துக் கொள்வார்கள்?

பெரியார், விடுதலை- 15.05.1972

சமுதாயத் துறையில் அரசியலை மறந்து ஆரியரோடு போர் தொடுத்தால் சமுதாய இழிவு நீங்கிவிடும். பொருளாதாரத் துறையில் அரசியலை மறந்து வடநாட்டானோடு போர் தொடுத்தால் சுரண்டல் நீங்கிவிடும்.

பெரியார், குடிஅரசு - 17.02.1945



என் அபிப்பிராயத்தை மறுக்க உங்களுக்கு உரிமையுண்டு. ஆனால் என் அபிப்பிராயத்தை வெளியிட எனக்கு உரிமையுண்டு.

பெரியார், பகுத்தறிவு - 01.09.1935

தொகுப்பு - வி.சி.வில்வம்

எனக்கு என்ன யோக்கிதை இருக்கிறது என்றால் துணிவு ஒன்றுதான். வேறு எந்த யோக்கியதையும் எனக்குக் கிடையாது.

பெரியார், விடுதலை - 25.10.1971

தொகுப்பு - வி.சி.வில்வம்

திராவிடம் என்பது நாமாக ஏற்படுத்திய கற்பனைச் சொல் அல்ல. அது நம் நாட்டையும், மக்களையும் குறிப்பிடும் சரித்திர சம்பந்தமான பெயராகும்.

பெரியார், குடிஅரசு – 14.07.1945

என் ஒருவனைக்
கொன்றால், காந்தியைப்
போல நாதியற்றுப்
போகாது.
பலர் கொல்லப்படுவார்கள்,
கலகம் ஏற்படும்,
பார்ப்பனர்கள் தப்ப முடியாது
என்பதால் என்னை
விட்டு வைத்தார்கள்.



பெரியார், விடுதலை - 13.04.1971

தொகுப்பு - வி.சி.வில்வம்



திதி, நட்சத்திரம், குறி, தர்ப்பையை காட்டி நான்கணா வாங்கி வயிறு கழுவியவனின் மகன் அய்க்கோர்ட் நீதிபதியாகிறான்.

பெரியார், விடுதலை - 25.10.1953

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆரியர்கள் பிறவி உயர்வாகவும், திராவிடர்கள் பிறவி இழிவாகவும் இருப்பது மக்களுக்குத் தென்படாததும், தென்பட்டாலும் சிந்திக்க அவசியம் இல்லாமலும் இருக்கிறார்கள்.

பெரியார், குடிஅரசு - 14.07.1945

தொகுப்பு - வி.சி.வில்வம்

கடவுளுக்கு ஆதாரம் என்ன என்று கேட்டால், அதெல்லாம் கேட்காதே நம்பு என்கிறான். சாணியைப் பார்த்து நாறுகிறதே என்றால், அதெல்லாம் மோந்து பார்க்காதே, நம்பு என்பதைப் போல் இருக்கிறது.

- பெரியார், விடுதலை 13.02.1973

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆரியம் என்றால் மாற்றத்திற்கு இடமில்லாதது. திராவிடம் என்றால் மாற்றிக் கொள்ள இடமளிப்பது என்பதே உண்மைத் தத்துவமாகும்.

- பெரியார், குடிஅரசு - 14.07.1945

தொகுப்பு - வி.சி.வில்வம்

தலைவிதி,
முன் ஜென்மம்,
கர்மப் பலன்
என்பவைகளைக்
கற்பித்துக் கொண்டு தனது
முட்டாள்தனத்துக்கும்,
அயோக்கியத்தனத்துக்கும்
பரிகாரமாக்கிக்
கொள்கிறான் மனிதன்.

குடிஅரசு – 26.05.1935

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பனர் நலனுக்குப் பாடுபடுவது இராஜாஜியின் அரசியல்.

பார்ப்பனர் அல்லாதார் நலனுக்குப் பாடுபடுவது தான் என்னுடைய அரசியல்.



- பெரியார், விடுதலை 27.07.1962

தொகுப்பு - வி.சி.வில்வம்

காலித்தனத்தில் ஆரியன் எவனாவது சிக்கிக் கொள்கிறானா? திராவிடன் கையில் சாணி உருண்டையையும், கல்லையும் கொடுத்து திராவிடன் மீதே எறியச் சொல்லி, வேடிக்கைப் பார்க்கிறான்.

பெரியார், குடிஅரசு - 22.06.1946

உங்களுக்கு
கடவுள் பக்தியை விட,
மனிதப் பக்திதான்
அதிகமாக இருக்க
வேண்டும்.

பெரியார், விடுதலை.22.08.1968

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆரியனை
மதகுருவாகவும்,
அரசியல் குருவாகவும்
கருதி அவன் பின்னால்
திரிவதைவிட, ஒரு
சமூகத்துக்கு வேறு
என்ன மானக்கேடு
இருக்கப் போகிறது?

பெரியார், குடிஅரசு - 10.01.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

மனித வாழ்வு என்பது மனிதச் சமுதாய வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் பாடுபடுவதுதான் என்பதை உணர்ந்து அதன்படி நடக்க வேண்டும்.

பெரியார், விடுதலை - 07.02.1972

பிறர் மதிக்க மாட்டார்களே, பழிப்பார்களே, எதிர்ப்பு வந்துவிடுமே, செல்வாக்குக் குறைந்து போகுமே எனப் பயம் உள்ளவர்கள் சீர்திருத்த வேலைக்கு உதவமாட்டார்கள்.

பெரியார், விடுதலை.25.06.1950

தொகுப்பு - வி.சி.வில்வம்



**பார்ப்பானிடம்
புகழ் வாங்குவது
வெகு சுலபம்.
சாமி உண்டு என்று
சொன்னால் போதும்
பகவான் இராமசாமி,
மகான் இராமசாமி,
மகாத்மா இராமசாமி
என்று
சொல்லியிருப்பான்!**

பெரியார், விடுதலை.18.09.1972

தொகுப்பு - வி.சி.வில்வம்



இராமகிருஷ்ணரை போற்றும் அன்பனே! சிந்தித்துப் பார். உன் வடலூர் இராமலிங்கம் எந்த விதத்தில் அவரைவிட தாழ்ந்தவர்? அவரை எந்த வடநாட்டானாவது போற்ற கண்டுள்ளாயா?

பெரியார், குடிஅரசு - 08.05.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

பெரியார், விடுதலை - 02.08.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

திருமலை நாயக்கன் பத்தாயிரம் பேருக்குச் சோறு போட்டு, சமஸ்கிருதப் பள்ளிக்கூடம் நடத்தினான். யாருக்கு? பார்ப்பானுக்கு.

பெரியார், விடுதலை - 02.08.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

நமக்கு ஒரு அரசனாவது எதுவும் செய்ததாகச் சரித்திரம் இல்லையே?

பெரியார், விடுதலை - 02.08.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

பசுவுக்கு மடம் கட்டி வைத்தான்; படிக்கப் பள்ளிக்கூடம் கட்டவில்லை.

பெரியார், விடுதலை - 02.05.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

முட்டாள்தனமாகக் கோயில் இல்லாத ஊரில் குடி இருக்காதே என்று சொன்னார்களே தவிர, கல்விச் சாலை இல்லாத ஊரில் குடி இருக்காதே என்று சொல்லவில்லை.

பெரியார், விடுதலை - 05.05.1966

தொகுப்பு - வி.சி.வில்வம்

பள்ளிக் கூடத்தில் சிறிது நேரத்தை ஒதுக்கி, பகுத்தறிவைச் சொல்லித் தர வேண்டும்.

பெரியார், விடுதலை - 20.08.1970

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆங்கிலேயன் சந்திரகிரகத்தில் இருந்து ஒலி கேட்கிறான். இவன் ஈரேழு பதினாலு லோகங்களைக் காட்டி திவச மந்திரம் சொல்கிறான்.

பெரியார், நூல் - மொழி - எழுத்து

தொகுப்பு - வி.சி.வில்வம்

கல்வியில் நான்கில் ஒரு பங்கு வயிற்றுப் பிழைப்பிற்கும், மூன்று பங்கு அறிவு, ஆராய்ச்சிக்கும் இருக்க வேண்டும்.

பெரியார், விடுதலை 05.11.1971

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பனர் அல்லாதார் ஆட்சி என்றால் நான் வலியப் போய் ஆதரித்து வந்திருக்கிறேன். இதில் நான் மான, அவமானம் பார்த்ததில்லை.



பெரியார், விடுதலை – 02.10.1967

தொகுப்பு - வி.சி.வில்வம்

இந்த இயக்கம் கடவுளைச் செருப்பாலடித்து, சாஸ்திரங்களைக் கொளுத்தவில்லை என்றால், நமக்கு படிப்பு ஏது? உத்தியோகம் ஏது?

பெரியார், சீர்திருத்த மாநாட்டு உரை- 29.08.1973

கல்வி இலாக்காவில் எப்பொழுது பார்ப்பனர்கள் ஆதிக்கம் ஒழிகிறதோ, அப்பொழுதுதான் கல்வியில் இருக்கும் பார்ப்பனியத்தை ஒழிக்க முடியும்.

பெரியார், விடுதலை – 17.05.1941

தொகுப்பு - வி.சி.வில்வம்

எல்லாம் கடவுள் செயல் என்று நாம் சொல்கிறோம். மனிதனால் முடியாத காரியங்கள் எதுவுமில்லை என்று மேலை நாட்டில் சொல்கிறான்.

பெரியார், குடிஅரசு – 03.06.1928

கடவுள் சம்பந்தம் இல்லாமல் ஒரு காரியமும் ஆகாது என, எல்லா பொறுப்பையும் கடவுள் மீது போட்டுவிட்டு, பக்தியாய் இருக்கச் சொல்கிறான்.

பெரியார், குடிஅரசு – 03.06.1928

தொகுப்பு - வி.சி.வில்வம்

மனிதனால் செய்ய முடியாத காரியம் எதுவுமில்லை. முயற்சி செய், பயனடைவாய். உன் சக்தியில் நீ சந்தேகம் கொள்ளாதே என மேலைநாட்டார் உற்சாகம் கொடுக்கின்றனர்.

பெரியார், குடிஅரசு – 03.06.1928

தொகுப்பு - வி.சி.வில்வம்

உன்னால் ஆகுமோ, ஆகாதோ என்று பயப்படாதே. சகல அற்புதங்களும், அதிசயங்களும், உனது நம்பிக்கைக்குள்ளும், முயற்சிக்குள்ளும் இருக்கின்றன.

பெரியார், குடிஅரசு – 03.06.1928

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பான் படிக்க
வேதபாட சாலை,
சமஸ்கிருதப் பள்ளிகள்
ஏற்படுத்தி,
ஓசி சோறு
போட்டார்களே தவிர,
காதொடிந்த ஊசி
அளவு கூட நமக்கு
நன்மை இல்லை.

பெரியார், விடுதலை – 29.04.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்



ஒரு சமூகத்திற்குச் சுயமரியாதை வேண்டுமானால் தொழிற் கல்வி மிக அவசியம்.

பெரியார், குடிஅரசு - 16.01.1927

தொகுப்பு - வி.சி.வில்வம்

நமது குழந்தைகளுக்கு ஆரம்ப ஆசிரியர்கள் அவர்களின் தாய்மார்களே ஆவர்.



பெரியார், குடிஅரசு - 01.05.1927

தொகுப்பு - வி.சி.வில்வம்

தொழில் பயிற்சி மக்களிடம் ஏற்பட்டுவிட்டால், மூடநம்பிக்கை உணர்ச்சியும் நல்ல அளவுக்குக் குறையும்.

பெரியார், விடுதலை - 11.10.1965

தொகுப்பு - வி.சி.வில்வம்



இந்திய அரசியல் சட்டத்தில் ஜாதிக்கும், மதத்திற்கும் பாதுகாப்பு இருக்கிறது. ஆதலால் அரசியல் சட்டத்தைக் கொளுத்தினேன்.

பெரியார், விடுதலை – 21.11.1957

தொகுப்பு - வி.சி.வில்வம்

உருப்போட்டு ஒப்புவிப்பதே பரீட்சை முறையாக இருக்கக் கூடாது. அப்படியானால் அர்ச்சகனும், புரோகிதனுமே ஒப்புவிக்க முடியும்.

பெரியார், குடிஅரசு - 22.05.1948

விளக்கு ஏற்றுவது இருளைப் போக்க என்று ஆசிரியர்கள் கூற வேண்டும். விழுந்து கும்பிடு எனக் கூறக் கூடாது.



பெரியார், விடுதலை – 01.12.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்



படிப்புக்கும், அறிவிற்கும் சம்பந்தம் இல்லை. படிப்புக்கும், ஒழுக்கத்திற்கும் சம்பந்தமில்லை.

பெரியார், விடுதலை – 19.01.1958

தொகுப்பு - வி.சி.வில்வம்



ஒரு மனிதன் தகுதி, திறமை பெற பள்ளிக்கு வருகிறான். என்றால், பள்ளிக்கு வரவே தகுதி, திறமை வேண்டும் என்பது எவ்வளவு அயோக்கியத்தனம்?

பெரியார், விடுதலை 02.03.1966

தொகுப்பு - வி.சி.வில்வம்

மார்க்கை வைத்து கெட்டிக்காரத்தனம், சோம்பேறித்தனம், யோக்கியன், அயோக்கியன், அறிவாளி, மடையன் என எதையும் கண்டுபிடிக்க முடியாது.

பெரியார்,விடுதலை – 16.03.1968

தொகுப்பு - வி.சி.வில்வம்

தகுதி, திறமை என்று சொல்லி, அனைத்து துறைகளையும் நானே எடுத்துக் கொள்வேன் என்று பார்ப்பனர்கள் சொல்வதை ஏற்க முடியாது.



பெரியார், விடுதலை 09.04.1950

தொகுப்பு - வி.சி.வில்வம்

பிள்ளைகளை மதவாதியாக ஆக்குவதை விட, அறிவாளியாக ஆக்க வேண்டும்.



பெரியார், விடுதலை - 16.12.1969

தொகுப்பு - வி.சி.வில்வம்

உலகில் அனேகப் பரீட்சைகளுக்கு பாஸ், ஃபெயில் இருக்கிறதே தவிர, மார்க்கு போடப்படுவதில்லை.

பெரியார், விடுதலை 16.03.1968

தொகுப்பு - வி.சி.வில்வம்

மாணவர்களைக் கசக்கிப் பிழிகிற பரிட்சை முறை இந்த நாட்டில் தான் இருக்கிறது. அறிவு பெற்ற நாடுகளில் இது கிடையாது

பெரியார், விடுதலை 28.11.1959

பகுதி
06



தந்தை பெரியார் பொன்மொழிகள்!

தொகுப்பு

வி.சி.வில்வம்

தொகுப்பு - வி.சி.வில்வம்
கல்வியில் இரண்டாவது இடத்திற்கு
தமிழ்நாட்டை உயர்த்தியது தான்
திராவிட மாடல் அரசின் சாதனை!
dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம் மூலம் 2 ஆண்டுகளில் 4.81 இலட்சம் மாணவிகள் மாதந்தோறும் ரூ 1000 பெறுகின்றனர்!

dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்
நான் முதல்வன் திட்டம் மூலம்
2 ஆண்டுகளில் 28 லட்சம் இளைஞர்கள்
பயன் பெற்றுள்ளனர்!
dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்
இல்லம் தேடிக் கல்வி மூலம்
24 இலட்சத்து
86 ஆயிரம் பிள்ளைகள் இதுவரை
பயன் பெற்றுள்ளனர்!
dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்
விவசாயிகளுக்கு
2 இலட்சம்
புதிய மின் இணைப்புகள்
வழங்கப்பட்டுள்ளன!
dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்
உயர்த்தப்பட்ட
ஓய்வூதியம் மூலம்
மாதந்தோறும் 30 இலட்சம்
முதியோர்கள்
பயன் பெற்று வருகின்றனர்
dkitwing

3.பல்லவன்
4.பாண்டியன்
5.வைகை
6.சேரன்

9.சேது
10.செம்மொழி
11.சிலம்பு
12.கம்பன்

மோடியின் ஆட்சியில் தமிழகத்திற்குள் ஓடும் இரயில்கள் பெயர்கள்

1.தேஜஸ்
2.ஜன்சதாப்தி
3.அந்தியோதயா
4.வந்தே பாரத்

தொகுப்பு - வி.சி.வில்வம்

தொகுப்பு - வி.சி.வில்வம்

1. பொய் தொழிற்சாலை

2. கிரிமினல் குற்றவாளிகளை, ஊழல்வாதிகளைத் தூய்மைப்படுத்தும்

தொகுப்பு - வி.சி.வில்வம்

தொகுப்பு - வி.சி.வில்வம்
இலவசப் பேருந்து பயணத் திட்டத்தில்
445 கோடி முறை பெண்கள்
பயணித்து வருகின்றனர் !
dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்
விஞ்ஞானப்பூர்வ ஊழலை
செய்துள்ளார் ‘உத்தமர்‘ மோடி.
தேர்தல் பத்திர மோசடியின்
மோடி வித்தைக்காரர் இவர் தான்!
dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஜனநாயகம் இன்றைக்குத்
தீவிர சிகிச்சைப் பிரிவில்
மரணப் படுக்கையில் இருக்கிறது!
அதனை நாம் காப்பாற்றியாக
வேண்டும்!

dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்

செத்த மொழி சமஸ்கிருதத்திற்கு 1400 கோடி நிதி ஒதுக்கீடு. தமிழுக்கு 10 விழுக்காடு கூட இல்லை. ஆனால் தமிழ் நல்ல மொழி என மோடி அடிக்கடி கூறுகிறார்.



dkitwing

படத்தின் நடுவில் நிற்பவர்

"ஸ்டேட் பேங்க் தேர்தல் பத்திரம்"

dkitwing

பாஜகவிடம் ஒரு கேள்வி ?

“அருணாசலப் பிரதேசத்தில்
இடம் வாங்கினால், பத்திரப்பதிவு
எங்கு செய்ய வேண்டும்,
இந்தியாவிலா ? சீனாவிலா ?

dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்

மோடி தன்னை
ஹீரோவாக நினைத்துக்
கொண்டிருக்கிறார்.
ஆனால் இந்திய மக்களுக்கு
அவர் ஜீரோ என்று
தெரிந்துவிட்டது
ஆசிரியர் கி.வீரமணி
dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்
ஒவ்வொரு குடிமகன்
கணக்கிலும் 15 இலட்சம்
பொத்தென்று விழும்
என்றார்கள்.
யார் கணக்கிலும்
பொத்தென்று
விழவில்லை!
ஆசிரியர் கி.வீரமணி
dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்

மோடியின் கூட்டணியில்
தேர்தல் ஆணையம், சிபிஅய்,
அமலாக்கப்பிரிவு,
வருமான வரித்துறை
போன்றோர் இருக்கிறார்கள்

ஆசிரியர் **கி.வீரமணி**

dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்

இதுவரை நடைபெற்ற 18 தேர்தல்களில்

மிசா காலத்தில் நடந்தது முக்கியமானது. அதன் பிறகு இப்போது நடப்பது மிக முக்கியமானது !

ஆசிரியர் **கி.வீரமணி**

dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்





மீண்டும் பாஜக ஆட்சிக்கு வந்தால், ஜனநாயகத்தின் கடைசித் தேர்தலாக இது அமைந்துவிடும்

ஆசிரியர் **கி.வீரமணி**

dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்

இலவசப் பேருந்து பயணத்தின் மூலம் மாதந்தோறும் ரூ 800 முதல் ரூ 1200 வரை பெண்கள் சேமிக்கின்றனர்.

dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்

எழுச்சித்தமிழர் அண்ணன்
திருமாவளவன் அவர்களை 3 இலட்சம்
வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச்
செய்ய வேண்டுமாய் அன்புடன்
கேட்டுக் கொள்கிறேன்.

- உதயநிதி ஸ்டாலின்

dkitwing

ஒன்றியப் பிரதமரை, அவரின்
பெயரைச் சொல்லிக் கூப்பிடாதீர்கள்.
அவருக்கு நாம் ஒரு செல்லப் பெயர்
வைத்திருக்கிறோம்.
“ 29 பைசா ” என்று கூப்பிடுங்கள்

- உதயநிதி ஸ்டாலின்

dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்

The Indian EXPRESS

இலட்சணம் பாரீர்!

23 எதிர்கட்சித் தலைவர்களின் தண்டனை, பாஜகவில் சேர்ந்தவுடன் நிறுத்தி வைப்பு !

- இந்தியன் எக்ஸ்பிரஸ் கட்டுரை

dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்
DK
IT WING
ஜூன் 3 - நம்முடைய தமிழினத் தலைவர்
கலைஞரின் நூற்றாண்டு நிறைவு !
ஜூன் 4 - இந்தியாவின்
புதிய விடுதலையின் துவக்க நாள் !
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

தொகுப்பு - வி.சி.வில்வம்
வேட்டி, சட்டை எல்லாம் அணிந்து,
தமிழ்த் தொலைக்காட்சிக்குப்
பிரதமர் மோடி பேட்டி என்ற பெயரில்
'சூட்டிங்' செய்திருக்கிறார் !
அது நியூஸ் டைம் அல்ல; காமெடி டைம் !
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

ஆணவச் சிந்தனை கொண்ட
நிர்மலா சீதாராமன்,
'5 ஆயிரம் கோடி கொடுத்தோம்,
கணக்கு எங்கே?', எனக் கந்து வட்டிக்காரர்
போல கேட்கிறார். அது வெளிநாட்டு
வங்கி கொடுத்த பணம். அதற்கும் ஒன்றிய
அரசிற்கும் தொடர்பில்லை.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

தொகுப்பு - வி.சி.வில்வம்

நிர்மலா சீதாராமன் அவர்களே!
ஓட்டுக் கணக்கு போட்டு,
பொய்களை அள்ளி வீசினால் மக்கள்
ஏமாந்து விடுவார்கள் என ஆணவத்தில்
தப்புக் கணக்கு போடாதீர்கள்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

தொகுப்பு - வி.சி.வில்வம்

பிரதமர் மோடிக்கு சமூகநீதி மேல்
அக்கறை இல்லை! மதச்சார்பின்மை
மருந்துக்கும் மதிப்பதில்லை!
வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட
இந்தியாவை அவருக்குப் பிடிப்பதே
இல்லை!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

தொகுப்பு - வி.சி.வில்வம்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்

மொழிக்கும், இனத்திற்கும், நாட்டிற்கும்
ஆபத்து என்றால், களத்திற்கு முதலில் வரும்
சகோதரர் திருமாவளவன்
அவர்களுக்குப் **பானை சின்னத்தில்**
வாக்களிக்க வேண்டும்!

தொகுப்பு - வி.சி.வில்வம்
பழங்குடி சமூகப் பெண்மணியைக்
குடியரசுத் தலைவர் ஆக்கிவிட்டோம் என்று
பெருமை பேசினார்கள். ஆனால்
அந்த அம்மாவை உட்கார வைக்காமல் நிற்க
வைத்துள்ளனர்! இதுதான் பாஜக பண்பாடு!
ஆசிரியர் கி.வீரமணி

தொகுப்பு - வி.சி.வில்வம்

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில்
1 கோடிக்கும் அதிகமானோர் இதுவரை
பயன் பெற்றுள்ளனர்!

dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்

140 கோடி மக்களும்
என் குடும்பம்
என்கிறார் மோடி.
மணிப்பூரில்
எங்கள் சகோதரிகளை
நிர்வாணமாக்கி,
தெருத் தெருவாக ஓட
விட்டார்கள்!

ஆசிரியர் கி.வீரமணி

தொகுப்பு - வி.சி.வில்வம்
DK
மக்கள்
மழையால்
பாதிக்கப்பட்ட போது
மோடி வரவில்லை.
தேர்தல் நேரத்தில் மட்டும்
அடிக்கடி வருகிறார்.
வந்து 'ரோடு ஷோ'
நடத்துகிறார்!
ஆசிரியர் கி.வீரமணி

தொகுப்பு - வி.சி.வில்வம்

பாஜக தமிழ்நாட்டில் வளர்ந்துவிட்டது என்கிறார்கள். கால் இருந்தால் தானே வளரும். உங்கள் கட்சி பெயரே 'மிஸ்டு கால்' கட்சிதானே!

ஆசிரியர் கி.வீரமணி

தொகுப்பு - வி.சி.வில்வம்

கூட்டணிக்காக பாஜக கதவைத் திறந்து வைத்திருந்திருந்தது. யாரும் வரவில்லை. பிறகு கதவையே கழற்றி வைத்திருந்தது. அப்போதும் யாரும் வரவில்லை!

ஆசிரியர் **கி.வீரமணி**

தொகுப்பு - வி.சி.வில்வம்

மோடி அவர்களுக்கு இரண்டு பேர் தான் சிம்ம சொப்பனமாக இருக்கிறார்கள். ஒன்று, ராகுல் காந்தி; மற்றொன்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!

ஆசிரியர் கி.வீரமணி

தொகுப்பு - வி.சி.வில்வம்

பெண்களுக்குக் கலைஞர்
கொண்டு வந்த 30% இட ஒதுக்கீடு

அரசு ஊழியர்களில் அதிகளவு பெண்கள்,
பள்ளிகளில் அதிகளவு பெண் ஆசிரியர்கள்,
மருத்துவமனையில் அதிகளவு
பெண் மருத்துவர்கள், நீதிமன்றத்தில்
அதிகளவு பெண் வழக்கறிஞர்கள்!

தொகுப்பு - வி.சி.வில்வம்
பெண்களுக்குக்
கலைஞர்
கொண்டு வந்த
30%
இட ஒதுக்கீடு
தாசில்தார், வட்டார வளர்ச்சி,
மாவட்ட ஆட்சியர், காவல்துறை,
பொதுப் பணித்துறை, பொறியாளர்
அலுவலகங்களில் அதிகளவு
பெண் ஊழியர்கள்!

தொகுப்பு - வி.சி.வில்வம்
DK
பெண்களுக்குக்
கலைஞர்
கொண்டு வந்த
33% இட ஒதுக்கீடு
ஊராட்சி மன்றத் தலைவர்கள்
ஒன்றியப் பெருந் தலைவர்கள்,
நகராட்சித் தலைவர்கள்,
துணை மேயர்கள்,
மேயர்கள் என 1 இலட்சத்திற்கும்
அதிகமான பதவிகளில் பெண்கள் !

மதம் கொண்ட யானை,
பாகனை தூக்கியடிக்கும்!
மதவெறி பிடித்த ஆட்சி
நாட்டு மக்களையே துவம்சம்
செய்யும்!

ஆசிரியர் கி.வீரமணி

தொகுப்பு - வி.சி.வில்வம்

38 மாவட்டங்களில் 11 பெண் ஆட்சியர்கள்
பெண்களுக்குக் கலைஞர் கொண்டு வந்த 30% இட ஒதுக்கீடு
தமிழ்நாட்டின் 38 மாவட்ட ஆட்சியர்களில், 16 பேர் பெண் மாவட்ட ஆட்சியர்கள் (COLLECTORS)
DK

தொகுப்பு - வி.சி.வில்வம்
முதலமைச்சரின்
காலை உணவு திட்டத்தில்
தினமும் 16 இலட்சம் மாணவர்கள்
பசியாறுகிறார்கள்!
dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்

பெண்களுக்குக் கலைஞர் கொண்டு வந்த 30% இட ஒதுக்கீடு

உள்துறை, வீட்டு வசதி, ஆதிதிராவிடர், பிற்படுத்தோர் நலத்துறைகளில் 10 - க்கும் மேற்பட்ட துறைகளின் செயலாளர்கள் பெண்கள்!

தொகுப்பு - வி.சி.வில்வம்
பெண்களுக்குக் கலைஞர்
கொண்டு வந்த 30% இட ஒதுக்கீடு
தமிழ்நாட்டில் 323
அய்.ஏ.எஸ்.
அதிகாரிகளில்,
96 பேர் பெண்கள்!
DK
IT
WING

தொகுப்பு - வி.சி.வில்வம்

எவ்வளவோ நிதி நெருக்கடியிலும், தாய்மார்களுக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்கி வருகிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

ஆசிரியர் கி.வீரமணி

தொகுப்பு - வி.சி.வில்வம்
ஒவ்வொரு கணக்கிலும்
15 இலட்சம் போடுவேன் என்றார் மோடி.
ஆனால் 'மினிமம் பேலன்ஸ்'
இல்லையென மக்களிடம் இருந்து
21 ஆயிரம் கோடிகளைப் பறித்துக்
கொண்டார்கள்!
ஆசிரியர் கி.வீரமணி

தொகுப்பு - வி.சி.வில்வம்
DK
IT WING
கனடா, அமெரிக்காவில்
மாணவர்களுக்குக் காலை சிற்றுண்டி
ஏற்பாடு செய்கிறார்கள். நம் தமிழ்நாடு
எவ்வளவு முன்னோடி மாநிலம்
பாருங்கள்!
ஆசிரியர் கி.வீரமணி

தொகுப்பு - வி.சி.வில்வம்

தேர்தல் 'பத்திரமாக' நடக்க வேண்டும் என்று நாமெல்லாம் நினைப்போம்! ஆனால் தேர்தலை பத்திரம் மூலம் நடத்திட, பாஜக பல்லாயிரம் கோடிகளை ஊழல் செய்திருக்கிறது!

ஆசிரியர் கி.வீரமணி

தொகுப்பு - வி.சி.வில்வம்



கடும் புயல், வெள்ளப் பாதிப்புகளைத் தேசியப் பேரிடர் என்பார்கள். இந்தியாவின் தேசியப் பேரிடரே பா.ஜ.க.அரசுதான். அந்தப் பேரிடரை அகற்றவே வருகிற நாடாளுமன்றத் தேர்தல்!

ஆசிரியர் **கி.வீரமணி**

தொகுப்பு - வி.சி.வில்வம்
DK
IT
WING
விவசாயக் கடன்,
கல்விக் கடன்களை
ரத்து செய்ய
நிதி இல்லை என்று
சொன்ன மோடி,
கார்பரேட்
நிறுவனங்களுக்கு
14 இலட்சம்
கோடியைத்
தள்ளுபடி
செய்துவிட்டார்!
கனிமொழி கருணாநிதி

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஒன்றிய நிதி
அனைத்தையும்
சமஸ்கிருத மொழிக்கு
வழங்கி விட்டு,
தேர்தல்
என்றவுடன்
தமிழ் மீது பற்று
வந்து விடுகிறது
மோடிக்கு!

கனிமொழி கருணாநிதி

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழ், தமிழர்கள் மீது பாசம் இருப்பதாகக் கூறும் மோடி, இதுவரை ஒரு ரூபாய் கூட கொடுக்காமல் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றி விட்டார்!

பிரகாஷ் காரத், (மா.கம்யூ)

தொகுப்பு - வி.சி.வில்வம்

இந்தியாவின் மொத்த வளர்ச்சி

7.24 விழுக்காடு.

தமிழ்நாட்டின் வளர்ச்சி மட்டும்

8.19 விழுக்காடு!

தொகுப்பு - வி.சி.வில்வம்

’பாஜக எனும் கேவலமான மாடலை’ இந்தியா முழுவதும் கொண்டு வர அதன் தலைவர்கள் முயற்சி செய்கிறார்கள். அதை அனுமதிக்கவே கூடாது.

பிரகாஷ் காரத், (மா.கம்யூ)

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஜனநாயகம், மதச்சார்பின்மை, சமூக நீதி ஆகியவற்றை நாம் உயர்த்திப் பிடிக்க நினைக்கிறோம்! பாஜகவினர் குழிதோண்டிப் புதைக்கப் பார்க்கிறார்கள்!

பிரகாஷ் காரத், (மா.கம்யூ)

தொகுப்பு - வி.சி.வில்வம்

DK

கடுமையான வெப்பம் நிலவுகிறது! அதைக் கூட பொறுத்துக் கொள்வோம்! ஆனால் பாஜக - மோடி என்கிற வெப்பத்தை நாம் விரட்டியாக வேண்டும்!

ஆசிரியர் **கி.வீரமணி**

தொகுப்பு - வி.சி.வில்வம்

கார்ப்பரேட் முதலாளிகளின் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள் மூலம் பொய் மூட்டைகளைப் பரப்பி, வட மாநில வாக்காளர்களை இனி ஏமாற்ற முடியாது!

ஆசிரியர் கி.வீரமணி

DK IT WING
திராவிட மாடல் போல,
பாஜக அரசுக்கு
எந்த மாடலும் கிடையாது!
அது ஓர் விளம்பர மாடல்!
ஆசிரியர் கி.வீரமணி

தொகுப்பு - வி.சி.வில்வம்

திராவிட மாடல் ஆட்சியைக் குறை கூற எத்தனை முறை மோடி, 'ரோடு ஷோ' நடத்தினாலும், பாறையில் தாமரை முளைக்காது என்பதே உண்மை!

ஆசிரியர் கி.வீரமணி

தொகுப்பு - வி.சி.வில்வம்

இந்தியா முழுவதும்
417 வேட்பாளர்களை
பா.ஜ.க. அறிவித்திருக்கிறது.
அதில் 116 பேர்
வேறு கட்சியில் இருந்து
வந்தவர்கள்.
அவர்கள் கட்சியில்
உறுப்பினர்கள்
கூட இல்லை!

கவிஞர் கலி.பூங்குன்றன்

தொகுப்பு - வி.சி.வில்வம்

1948 முதல் 2024 வரை 76 ஆண்டுகளாக, அதாவது 15 வயது முதல் 91 வயதான இன்று வரை தேர்தல் பிரச்சாரம் செய்யும் ஒரே தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தான்!



கவிஞர் **கலி.பூங்குன்றன்**

தொகுப்பு - வி.சி.வில்வம்

'தமிழ்நாடு வேண்டாம்'
என்று புறக்கணித்த
மோடிக்கு,
ஒரே முழக்கத்தில்
நாம் சொல்ல வேண்டியது,
வேண்டாம் மோடி!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

தொகுப்பு - வி.சி.வில்வம்

மோடி அவர்களே!
நீதிக்கட்சித் தலைவர்
தியாகராயர், சவுந்திர பாண்டியனார்
பெயரில் இருக்கும் பாண்டி பஜார்,
பனகல் அரசர் பெயரில் இருக்கும்
பூங்கா போன்ற திராவிடர்
கோட்டத்தில் உங்கள்
'ரோடு ஷோ' எடுபடுமா?

முதல்வர் **மு.க.ஸ்டாலின்**

தொகுப்பு - வி.சி.வில்வம்

இந்திய அளவில் பணவீக்கம் 6.65 விழுக்காடு. தமிழ்நாட்டின் அது 5.97 ஆக குறைந்து காணப்படுகிறது.

dkitwing

தொகுப்பு - வி.சி.வில்வம்

சென்னை மெட்ரோ
திட்டத்தை விரிவாக்கம்
செய்யப்போகிறாராம்.
மோடி அவர்களே...
பிரதமர் மோடி அவர்களே
அந்தத் திட்டத்திற்குத்
தடையாக இருப்பதே
நீங்கள் தான்!

முதல்வர் **மு.க.ஸ்டாலின்**

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஊழலுக்கு ஒரு 'யுனிவர்சிட்டி' கட்டி, அதற்கு ஒருவரை வேந்தராக நியமிக்க வேண்டும் என்றால், அதற்குப் பொருத்தமான நபர் மோடி மட்டுமே!

முதல்வர் **மு.க.ஸ்டாலின்**

தொகுப்பு - வி.சி.வில்வம்
DK
IT WING
'வேண்டாம் மோடி'
எனத் தெற்கில் இருந்து
நாம் எழுப்பும் குரல்,
இந்தியா முழுவதும்
கேட்க வேண்டும்!
முதல்வர் மு.க.ஸ்டாலின்

தொகுப்பு - வி.சி.வில்வம்

அமைதியான இந்தியா தான், வளர்ச்சியான இந்தியாவாக மாற முடியும்! அதற்கு பாஜக ஆட்சி மாற்றப்பட வேண்டும்!

முதலமைச்சர் **மு.க.ஸ்டாலின்**

தொகுப்பு - வி.சி.வில்வம்

மோடி அவர்களே! உங்கள் ரோடு ஷோ, ஃபிளாப் ஷோ ஆனது தான் மிச்சம்!

முதலமைச்சர் **மு.க.ஸ்டாலின்**

தொகுப்பு - வி.சி.வில்வம்

இட்லி, பொங்கல் பிடிக்கும்! தமிழ், தமிழ்நாடு பிடிக்கும் என்று பேசும் பிரதமரின் போலி முகமூடி மொத்தமாகக் கிழிந்து தொங்குகிறது !

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

தொகுப்பு - வி.சி.வில்வம்

தம் நடைப் பயணத்தில் மக்களோடு மக்களாக இருந்து, அவர்களின் பிரச்சினைகளை அறிந்து, தேர்தல் அறிக்கையைத் தயார் செய்திருக்கிறார் சகோதரர் ராகுல்!

முதலமைச்சர் **மு.க.ஸ்டாலின்**

தொகுப்பு - வி.சி.வில்வம்

இந்தியாவில் கருத்தியல் போராட்டம் நடைபெற்று வருகிறது! இது சாதாரண தேர்தல் அல்ல; தத்துவப் போர்!

ராகுல்காந்தி

தொகுப்பு - வி.சி.வில்வம்

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர், காமராஜர் போன்றோர் தங்கள் அறிவாற்றலின் மூலம் தமிழக மக்களின் உணர்வுகளில் கலந்தவர்கள்!

ராகுல்காந்தி

இராமர் கோவில் கட்டுவது, காஷ்மீரின் சிறப்புத் தகுதியை நீக்குவது, குடியுரிமைச் சட்டத்தை அமல்படுத்துவது இந்த மூன்றில் மட்டுமே மோடிக்கு அதிக ஆர்வம்....

DK IT WING

முரசொலி நாளிதழ்

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஏற்றுமதி தயார் நிலை குறியீட்டில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதல் மாநிலம்!

dkitwing

நாற்பதும் நமதே !
நாடும் நமதே ! என்கிற
மு.க.ஸ்டாலின் அவர்களின்
அறை கூவல் வெல்லும் !
வருங்கால இந்தியக் கூட்டணி
அதைச் சொல்லும் !

தமிழ்ப்பணி தலையங்கம்

தொகுப்பு - வி.சி.வில்வம்

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களை உட்கார விடாமல், நிற்க வைத்த 'அர்த்தமுள்ள' ஹிந்துத்துவா ஆட்சி தான் இப்போது நடைபெறுகிறது!

விடுதலை தலையங்கம்

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆதிவாசிகளின் நிலம், காடுகள், வாழ்வாதாரங்கள் மீது மட்டுமின்றி, அவர்களின் கலாச்சாரம், பாரம்பரியத்தின் மீதும் பாஜக தாக்குதல் நடத்தியுள்ளது!

தீக்கதிர் தலையங்கம்

தொகுப்பு - வி.சி.வில்வம்

'அன்பிற்குரிய
மூத்த சகோதரர்
மு.க.ஸ்டாலின் அவர்கள்!'
வேறு எந்த அரசியல்
தலைவரையும் நான்
இப்படி அழைப்பதில்லை!

ராகுல் காந்தி

தொகுப்பு - வி.சி.வில்வம்

'பாஜக ஆட்சி' என்று சொல்வாதீர்கள்!

பாசிச ஆட்சி, ஊழல் ஆட்சி
மதவாத ஆட்சி, வரி வசூல் ஆட்சி
கார்ப்பரேட் ஆட்சி, வதந்தி பரப்பும் ஆட்சி
மக்கள் விரோத ஆட்சி,
பொய் சொல்லும் ஆட்சி
பெண்களுக்கு எதிரான ஆட்சி
விலைவாசியை ஏற்றும் ஆட்சி
அச்சத்தை உருவாக்கும் ஆட்சி
அரசமைப்புக்கு எதிரான ஆட்சி
என்று கூறுங்கள்

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆர்.எஸ்.எஸ், பாஜகவின் அடாவடித்தனம்!

சுதந்திரமாக எழுதியது மாறி, கடந்த ஓராண்டுகளாக முகநூலில் பதிவுகள் முடக்கப்படுவதை உணர்கிறீர்களா ?

தொகுப்பு - வி.சி.வில்வம்

பாஜகவின் பிரித்தாளும் சூழ்ச்சி!

உறவினர்கள், நண்பர்கள் மத்தியில், மதம் தொடர்பான விவாதங்கள் அதிகரித்து நட்பே கெட்டுப் போகும் சூழல் உருவாவதை அறிகிறீர்களா?

தொகுப்பு - வி.சி.வில்வம்

உறவினர்களின் வாட்சப் குழுவில் ஹிந்துத்துவா பிரச்சாரங்களை முன்னெடுக்கும் உறவுகளால் மனக்கசப்பு வளர்வதை அறிகிறீர்களா?

இந்தியர்கள் குறித்துக் கவலைப்படாமல், எந்நேரமும் மதம் குறித்தே பேசி வரும் மோடியின் அக்கிரமத்தைக் கவனித்து வருகிறீர்களா?

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆயிரம் பிரச்சினைகள்
இருக்கையில்,
மூளைச் சலவையால்
மதங்களைப்
பற்றி மட்டுமே
பேசுபவர்கள்
எண்ணிக்கை
அதிகரிப்பதை
உணர்கிறீர்களா?

தொகுப்பு - வி.சி.வில்வம்

மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது தமிழ்நாடு!

dkitwing

ஒவ்வொரு பொருளுக்கும் கடுமையான அளவு GST கட்டுவதால் செலவுகள் கூடி வருவதை கண்டு கவலை கொள்கிறீர்களா?

‘மினிமம் பேலன்ஸ்’ இல்லை என்று கூறி, மோடி அரசு 21 ஆயிரம் கோடி வழிப்பறி செய்ததை அறிந்து வைத்திருக்கிறீர்களா?

மைல் கல்லில் ஹிந்தி, ஆங்கிலம் மட்டுமே இருப்பதையும், ’கஸ்டமர் கேர்’ அழைப்பில் அதிகம் ஹிந்தியில் பேசுவதையும் கவனிக்கிறீர்களா?

தொகுப்பு - வி.சி.வில்வம்

மோடி அரசில் கடந்த பத்து ஆண்டுகளில் புதுப்புது ஊழல்கள் அதிகரித்து, நாட்டின் இதயமே அழுகி இருப்பதை அறிகிறீர்களா?

தொகுப்பு - வி.சி.வில்வம்

'டோல்கேட்' கட்டணத்திற்கு இப்போது மிக அதிகம் செலவாகி வருவதைக் கவனித்தீர்களா?

தொகுப்பு - வி.சி.வில்வம்

அமலாக்கத்துறை, சி.பி.அய், வருமானவரித்துறை போன்றவற்றை தவறாக வழிநடத்தி நாட்டைச் சீரழித்ததை கவனிக்கிறீர்களா?

தொகுப்பு - வி.சி.வில்வம்
இரயில் கட்டணங்களைக் கடுமையாக உயர்த்தியும், மூத்தக் குடிமக்களின் சலுகைப் பணத்தைக் கொள்ளை அடித்தவர்களையும் மறந்துவிடாதீர்கள்!
DK

தொகுப்பு - வி.சி.வில்வம்

கேஸ் சிலிண்டர் மற்றும் பெட்ரோல் செலவுகள் நம் இரத்தத்தை உறிஞ்சி வருவதை நாம் மறந்து விடமுடியுமா?

தொகுப்பு - வி.சி.வில்வம்

படிக்கும் பிள்ளைகள் கல்லூரியின் சட்ட திட்டங்களுக்கு அடங்கித்தான் இருக்க வேண்டுமே தவிர சண்டை விளைவிப்பதோ, கலகம் செய்வதோ கூடாது.

பெரியார், விடுதலை 09.12.1958

தொகுப்பு - வி.சி.வில்வம்



முதலில் மாணவர்கள் ஆசிரியருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அடுத்து ஒழுங்குமுறை பழக வேண்டும். அதற்கு அடுத்தாற் போல்தான் பாடம் படிப்பதாகும்

பெரியார், விடுதலை 15.09.1962

தொகுப்பு - வி.சி.வில்வம்

மாணவர்களுக்குப் படிப்புதான் முக்கியம். எந்தக் காரணத்தைக் கொண்டும் தளர்ச்சியடைக் கூடாது. சினிமாவுக்கும், கோவிலுக்கும் போகக் கூடாது

பெரியார் விடுதலை 30.06.1957

தொகுப்பு - வி.சி.வில்வம்
கலைஞர் மகளிர் உரிமைத்
திட்டத்தில் 1.16 கோடி மகளிர்
மாதந்தோறும் ரூ 1000
பெற்று மகிழ்கின்றனர் !
dkitwing


தொகுப்பு - வி.சி.வில்வம்
இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது!
dkitwing

பகுதி
07

தந்தை பெரியார் பொன்மொழிகள்!

தொகுப்பு

வி.சி.வில்வம்

தொகுப்பு - வி.சி.வில்வம்

மனிதனுக்கு ஆறறிவு
இருக்கிறது என்பது,
மனிதனைப் பிற
பிராணிகளிடம் இருந்து
பிரிப்பதற்குப் போதுமான
காரணம் இல்லை.
சிந்திக்கும் தன்மை எல்லா
பிராணிகளுக்கும்
இருக்கிறது.

பெரியார், குடிஅரசு – 14.04.1945

நமக்கு திராவிடர், தமிழர் என்கிற பெயர்களைவிட சூத்திரர், தீண்டப்படாதவர், நாலாம் ஜாதி, அய்ந்தாம் ஜாதி என்கிற பெயர்களே இருக்கின்றன.

பெரியார், குடிஅரசு - 28.07.1940

தொகுப்பு - வி.சி.வில்வம்

தோழர்களே!

கடலூரில் எந்த இடத்தில் என் மீது செருப்பு வீசப்பட்டதோ, அதே இடத்தில் இன்று எனது சிலை இருக்கிறது.

பெரியார், விடுதலை - 24.03.1973

தொகுப்பு - வி.சி.வில்வம்



பார்ப்பனர்களும், பார்ப்பனக் கூலிகளும் என் மீது கல் எறிவதோ, காலித்தனம் செய்வதோ எனக்குப் புதிதல்ல!

DK IT WING

பெரியார், விடுதலை - 24.03.1973

தொகுப்பு - வி.சி.வில்வம்



கல்லால் அடிப்பார்கள், அழுகிய முட்டையால் அடிப்பார்கள், மலத்தை வாரி அடிப்பார்கள், ஏன் செருப்படியே வாங்கி இருக்கிறேன்.

பெரியார், விடுதலை - 24.03.1973

தொகுப்பு - வி.சி.வில்வம்



பொது வாழ்வில்
ஈடுபட்ட எனக்கு
அவமானம் புதிதல்ல.
எனது பெருமையோ,
மதிப்போ அதனால்
குறைந்ததில்லை,
அதிகரிக்கவே
செய்திருக்கிறது.

பெரியார், விடுதலை – 24.03.1973

தொகுப்பு - வி.சி.வில்வம்

நான் ஒரு அதிசய மனிதன், மகான் என்றெல்லாம் கூறமாட்டேன். ஆனால் துணிவு உடையவன், கண்டதையும் ஆராய்ந்து கூறுபவன்.



பெரியார், விடுதலை –31.01.1960

தொகுப்பு - வி.சி.வில்வம்

சிந்தித்தால் பாவம்,
கேள்வி கேட்டால்
பாவம் என்று
பயமுறுத்தி, எந்தச்
சங்கதியையும்
நம்மால் ஆராய
முடியாமல்
போய்விட்டது.

பெரியார், விடுதலை – 11.06.1954

தொகுப்பு - வி.சி.வில்வம்



ஒரு மதமும் வேண்டாம் என்பது தான் சரியான பேச்சும், திட்டமும் ஆகும்.

பெரியார், குடிஅரசு - 31.05.1936

தொகுப்பு - வி.சி.வில்வம்

நாம் வேறு ஆரியர் வேறு என்கின்ற உணர்ச்சி நமக்கு வர வேண்டும்.

பெரியார், குடிஅரசு –21.08.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

எனது பொது வாழ்வில், எந்தப் பார்ப்பனரும் எனக்குச் சொந்தத்தில் எதிரி கிடையாது.

பெரியார், குடிஅரசு –28.07.1940

தன்னைப்பற்றி
கவலை
கொள்ளாமல்,
பிறருக்காகத் தன்னை
ஒப்படைத்துக்
கொண்டு
செயல்படுகிறவர்,
மதிக்கப்பட்டே
தீருவார்.

பெரியார் – விடுதலை 08.04.1950

தொகுப்பு - வி.சி.வில்வம்

நான் எனது பொது வாழ்வில், ஏதாவது பலன் பெற்றவனோ, வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டவனோ கிடையாது.

பெரியார், குடிஅரசு -21.08.1948

சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட திராவிட மக்களைக் கூடிய விரைவில் சம சமுதாயமாக மாற்ற வேண்டும்.

பெரியார், குடிஅரசு –21.08.1948

எனது பேச்சால்,
எழுத்தால்,
செயலால்
எங்காவது
பலாத்காரம்,
குழப்பம், கலகம்
ஏற்பட்டுள்ளதா?

பெரியார், குடிஅரசு -21.08.1948

நான் சொல்வதில்
சில தவறாகத்
தோன்றலாம்.
ஆனால் அதில்
உள்ள நன்மைகளை
எடுத்துக்
கொள்ளுங்கள்.

பெரியார், குடிஅரசு -30.03.1924

தொகுப்பு - வி.சி.வில்வம்

சிலரின் அறுவெறுப்புக்கோ, கோபத்திற்கோ பயந்து, நான் எனது திட்டத்தை மாற்றிக் கொண்டதே கிடையாது.

பெரியார், குடிஅரசு -30.03.1924

தொகுப்பு - வி.சி.வில்வம்

நான் பழமை, வழமை, பெரியோர் கருத்து, சாஸ்திரம் என்பவைகளைக் கண்மூடி பின்பற்றாத ஒரு பகுத்தறிவுவாதி என்று சொல்லப்படுபவன்.



பெரியார், குடிஅரசு – 11.11.1924

எனது கிராமச் சீர்திருத்தத் திட்டம் என்பது, நாட்டில் கிராமங்களே இல்லாமல் ஒழித்துவிடுவது. கிராமங்கள் என்கிற வார்த்தை அகராதியில் கூட இருக்கக்கூடாது.

பெரியார், குடிஅரசு – 11.11.1924

ஆதிதிராவிடர் முன்னேற்றத்திற்கு உழைப்பதாய் நினைத்துக் கொள்வதும், பேசுவதும் வேஷமே ஆகும்.

பெரியார், குடிஅரசு - 25.04.1926

தொகுப்பு - வி.சி.வில்வம்

பறையர் என்கிற
ஜாதிப்பெயர் நாட்டில்
இருப்பதால் தான்
சூத்திரர் என்கிற
பெயரும் இருக்கிறது.
பறையர் என்பதை விட,
சூத்திரர் என்பது மிக
இழிவானது.

பெரியார், குடிஅரசு - 25.04.1926

நமது நாட்டில் தொழிலாளிகள் என்பவர்கள் கூலிக்காரர்களே. தொழிலாளி என்பவர் ஒரு தொழிலைக் கற்று தானும், நாட்டு மக்களும் பலன் அடையும்படி செய்பவரே ஆவர்

பெரியார், குடிஅரசு – 25.04.1926

தொகுப்பு - வி.சி.வில்வம்



ஒரு காலத்தில்
தேசம், தேசியம்,
தேசப்பற்று என்பதை
நாகரீகமாகக்
கருதினோம். இப்போது
உலக சகோதரத்துவம்
என்பதையே பெரிதும்
முன் வைக்கிறோம்.

பெரியார், புரட்சி – 31.12.1933

ஆடவரிலும் சரி,
பெண்டிரிலும் சரி
முறையே
அறிவாளிகளும்,
ஆண்மை
உடையோரும்,
அறிவிலிகளும்,
பேடிகளும் உள்ளனர்.

பெரியார், குடிஅரசு - 22.08.1926

மனிதன் சுதந்திரம் பெற, பெண்களை அடிமையாகக் கருதும் அகம்பாவமும், கொடுமையும் ஒழிய வேண்டும்.

பெரியார், குடிஅரசு - 22.08.1926

மக்களின்
சுயமரியாதைக்கும்
உரிமைக்கும்
ஆபத்தான இயக்கம்
என்று எதையாவது
நான் கருதினால்,
அதை அடியோடு
ஒழிக்க நினைப்பேன்.

பெரியார், குடிஅரசு - 07.11.1926

தொகுப்பு - வி.சி.வில்வம்



எந்த விதமான பழியோ, ஆபத்தோ வந்தாலும் அவற்றைக் கொஞ்சமும் இலட்சியம் செய்யாமல் என்னால் முடிந்ததை செய்தே தீருவேன்.

பெரியார், குடிஅரசு - 07.11.1926

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பனர்களோடு சேர்ந்து தம் வாழ்விற்கும், வயிற்றுப் பிழைப்பிற்கும் தேசாபிமானம் எனும் போர்வையைப் போர்த்திக் கொள்வார்கள். அவர்களை நாம் பொருட்படுத்தக்கூடாது.

பெரியார், குடிஅரசு - 19.12.1926

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பனர்கள் தக்க
சூழ்ச்சிகள் செய்து
நம்மில் சிலரையே
ஆயுதமாகக் கொண்டு,
நம் முயற்சிகளை
அழித்து
வருகிறார்கள்.

பெரியார், குடிஅரசு - 19.12.1926

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பனர்கள்
எவ்வளவு சூழ்ச்சி
செய்தாலும், எவ்வளவு
அழித்தாலும், நமக்குத்
தோல்வியே
ஏற்பட்டாலும், நம்
முயற்சி நாளுக்கு நாள்
வளர்கிறதே தவிர,
குறையவே இல்லை.

பெரியார், குடிஅரசு – 19.12.1926

தொகுப்பு வி.சி.வில்வம்

நாம் யாருக்காவது கெடுதி செய்கிறோமா? யாருடைய உரிமையாவது பறிக்கிறோமா? நமது சுயமரியாதைக்குப் பாடுபடுகிறோமே தவிர, மற்றவர்களை விரோதியாகப் பார்ப்பதில்லை.

பெரியார், குடிஅரசு – 19.12.1926

தொகுப்பு - வி.சி.வில்வம்

நமது இழிவுகளும்,
தாழ்வுகளும் ஒழிய
வேண்டும். அவர்
என்ன சொல்கிறார் ?
இவர் என்ன
சொல்கிறார் ?
என்பதை பற்றி நாம்
கவலைப்படக் கூடாது.

பெரியார், குடிஅரசு – 19.12.1926

தொகுப்பு - வி.சி.வில்வம்

நாம் ஏதாவது ஒன்றிற்கு ஆசைப்பட்டால் நமக்கு யோக்கியதை இல்லை என்கிறார்கள்.
யோக்கியதை உண்டாக்கிக் கொள்ள முயற்சித்தால் தேசத் துரோகி, வகுப்புத் துரோகி என்கிறார்கள்.

பெரியார், குடிஅரசு – 19.12.1926

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஒரு தாய் வயிற்றில்
பிறந்த பிள்ளைகளுக்கு
எப்படி சம அந்தஸ்து,
சம உரிமை உண்டோ,
அப்படியே ஒரு
தேசத்தில்
பிறந்தவர்களுக்கும்
இருக்க வேண்டும்.



பெரியார், பகுத்தறிவு – 09.09.1934

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பனர்களுக்குப்
பணம் கொடுத்து அவன்
காலில் விழுந்தால்,
நமது பெற்றோர்கள்
மோட்சத்திற்கு
போவார்கள் என்று
இன்னமும் நினைத்துக்
கொண்டிருக்கிறார்கள்.

பெரியார், குடிஅரசு – 09.01.1927

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பனர்கள், தாங்களே தேசப்பக்தி உள்ளவர்கள் என்றும். தங்கள் பத்திரிகையே தேசியப் பத்திரிக்கைகள் என்றும், நம் பணத்தில் விளம்பரப்படுத்தி வயிறு வளர்க்கிறார்கள்.

பெரியார், குடிஅரசு – 30.01.1927

தொகுப்பு - வி.சி.வில்வம்

பார்ப்பனப் பத்திரிக்கைகளை வாங்கி படிப்பது என்றால், யாராவது நம்மை அறிவு, மானம், வெட்கம், சுயமரியாதை உள்ள சமூகம் என்று சொல்வார்களா ?

பெரியார், குடிஅரசு – 30.01.1927

தொகுப்பு - வி.சி.வில்வம்

நோய் இல்லாதவர்களுக்கு டாக்டர்கள் தேவை இல்லை. மேலோகத்தில் நம்பிக்கை இல்லாதவர்களுக்குப் புரோகிதர்கள் தேவையில்லை.

பெரியார், விடுதலை - 26.12.1951

DK IT WING

தொகுப்பு - வி.சி.வில்வம்

கம்யூனிஸ்ட் கட்சி, பணக்காரர்களை ஒழிப்பதில் முதல் படியில் நிற்கிறது. திராவிடர் கழகம், பார்ப்பனியத்தை ஒழிப்பதில் முதல் படியில் நிற்கிறது.

பெரியார், விடுதலை - 04.10.1951

தொகுப்பு - வி.சி.வில்வம்

திராவிடர் கழகத்தின் பின் சந்ததிகளும், பிராமணர்களின் பின் சந்ததிகளும் இந்தப்படியே இருப்பார்கள் என்று கூற முடியாது. எனவே அதிருப்திகளை மாற்றிக் கொள்வது இருவருக்கும் நலம்.

பெரியார், விடுதலை - 08.01.1953

தொகுப்பு - வி.சி.வில்வம்

தமிழ், தமிழ்நாடு என்கிற பெயர் கூட இந்நாட்டுக்கு வைக்க இடமில்லாதபடி எதிரிகள் சூழ்ச்சி செய்துவிட்டார்கள். இந்நிலையில் நாம் வேறு எதற்காக இருக்கிறோம் என்று தோன்றவில்லை.

பெரியார், விடுதலை - 11.10.1955

தொகுப்பு - வி.சி.வில்வம்

சாதாரணமாகச் சிந்திக்கத் தொடங்கிவிட்டால், ஆராயும் பழக்கம் வந்துவிட்டால், எல்லா குறைகளையும் எளிதாகப் போக்கிக் கொள்ள முடியும்.

பெரியார், விடுதலை - 11.06.1954

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஆந்திரா, கர்நாடகா, கேரளா பிரிந்து போன பின்பு, நம் தமிழகத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைப்பதில் என்ன பிரச்சனை ?

பெரியார், விடுதலை - 25.10.1955

திராவிடர் இயக்கம் மூலம் பாமர மக்களும் பகுத்தறிவு பெற்றதால், அவர்களைச் சுலபமாக ஏமாற்ற முடியாமல் போய்விட்டது.

பெரியார், குடியரசு 04.09.1932

தொகுப்பு - வி.சி.வில்வம்

தங்களைப் பற்றிய அறிவும், தங்கள் சுயமரியாதைக் குறித்தக் கவலையும் நம் மக்களுக்கு இன்னும் சரியாக வரவில்லை.

பெரியார், குடிஅரசு – 28.07.1940

தொகுப்பு - வி.சி.வில்வம்

நம்மை முதன்மையாக எதிர்ப்பவர்கள் பண்டிதர்கள், புரோகிதர்கள், புத்தக வியாபாரிகள், புராணப் பத்திரிகைகாரர்கள், கோயில் தருமகர்த்தர்கள், மடத்தலைவர்கள் ஆகியோர்.

பெரியார், குடியரசு 04.09.1932

தொகுப்பு - வி.சி.வில்வம்

இந்த இயக்கத்தின் மூலம் தங்கள் பிழைப்பிற்குப் பாதகம் உண்டான கூட்டத்தார். நமது இயக்கத்தை மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் எதிர்த்து வருகின்றனர்

பெரியார், குடியரசு 04.09.1932

தொகுப்பு - வி.சி.வில்வம்

கோயில் சொத்துக்களை எல்லாம் பறிமுதல் செய்து அவைகளைக் கல்வி, கைத்தொழில், சுகாதாரம் முதலியவைகளுக்குச் செலவு செய்ய வேண்டும்.

பெரியார், குடியரசு 04.09.1932

தொகுப்பு - வி.சி.வில்வம்

அறிவைக் கொண்டு
சிந்தித்து
நாத்திகரானவர் புத்தர்.
அவர் ஓர் அறிவுவாதி,
ஆராய்ச்சிவாதி.
அதனாலே அவரின்
கொள்கைகளைப்
பார்ப்பனர்கள்
அழித்துவிட்டார்கள்.

பெரியார், விடுதலை – 04.01.1957

தொகுப்பு - வி.சி.வில்வம்

புத்தர் மக்கள் உள்ளத்தில் விதைத்த விதை முளைத்து, வளர ஆரம்பித்தது. ஆழ்வார்கள், நாயன்மார்கள் அதை எதிர்த்து, கொடுமை செய்து ஒழித்து விட்டார்கள்.

பெரியார், விடுதலை – 04.01.1957

தொகுப்பு - வி.சி.வில்வம்

என்ன தைரியம்?
நமக்குத் தகுதி இல்லை,
திறமை இல்லை
என்கிறார்கள்.
கொஞ்சம் முன்னேறலாம்
என்றால், ஜாதி
தொழிலுக்கே போங்கள்
என்கிறார்கள்

பெரியார், விடுதலை – 04.06.1954

தொகுப்பு - வி.சி.வில்வம்

கலப்புத் திருமணம் என்றால் மனிதனுக்கும், மிருகத்திற்கும் நடப்பதே ஆகும். வெவ்வேறு ஜாதியில் உள்ள ஆணுக்கும், பெண்ணுக்கும் நடப்பது ஜாதி மறுப்புத் திருமணமாகும்.

பெரியார், விடுதலை – 15.12.1968

தொகுப்பு - வி.சி.வில்வம்

போலீஸ் வேலை அனைத்தையும் ஆதிதிராவிடர்களுக்கே கொடுக்க வேண்டும். மற்ற யாரையும் அதில் நுழைய விடக்கூடாது. அப்படி செய்தால் தீண்டாமை இழிவு ஒழியும்.

பெரியார், விடுதலை – 15.12.1968



தொகுப்பு - வி.சி.வில்வம்

மலம் தின்னும் பன்றியும், கோழியும் சாப்பிட்டால் தீண்டாமை இல்லை. பச்சைப் புல்லும், பருத்திக் கொட்டையும் தின்னும் மாட்டைத் தின்றால் மட்டும் தீண்டாமையா?

பெரியார், விடுதலை – 20.05.1963

தொகுப்பு - வி.சி.வில்வம்

தீண்டாமையையும், ஜாதியையும் ஒழிக்க விரும்பினால், உங்கள் மதத்தை நீங்கள் ஒழித்தாக வேண்டும்.

பெரியார், விடுதலை - 28.07.1935

எவ்வளவு பெரிய அயோக்கியனும், கொடுமைக்காரனும் ‘ராமா’ என்றோ, ‘சிவசிவா’ என்றோ சொல்லிவிட்டால், சகல பாவங்களும் போய்விடும் என்று நினைக்கிறார்கள்.

பெரியார், குடிஅரசு – 31.05.1936

தொகுப்பு - வி.சி.வில்வம்

வீதியில் மலம், மூத்திரம், எச்சிலை மிதித்துக் கொண்டு வரும் பார்ப்பான், நமது பட்டுப் பாயைக் கண்டால் தாண்டிக் குதிக்கிறான்.

பெரியார், விடுதலை - 13.04.1930

தொகுப்பு - வி.சி.வில்வம்

சிரைக்கிற, வெளுக்கிற, மூட்டை தூக்குகிற, கல் உடைக்கிற, கக்கூசு கழுவுகிற பார்ப்பனர்கள் யாரையாவது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

பெரியார், விடுதலை - 25.03.1954

தொகுப்பு - வி.சி.வில்வம்



செல்வவான்கள் இல்லாவிட்டால் தரித்திரவான்களே இருக்கமாட்டார்கள். மேல் வகுப்பார் இல்லாவிட்டால் கீழ் வகுப்பார் இருக்கவே மாட்டார்கள்.

பெரியார், குடியரசு – 27.08.1933

தொகுப்பு - வி.சி.வில்வம்

உயர் ஜாதி ஆணவமும், அதைத் தாங்கி நிற்கும் பழக்க, வழக்கம் எனும் தூண்களும் என்று சரிந்து தரைமட்டமாகிறதோ அன்றே நம் நாட்டு நாகரிகமும் தழைத் தோங்கும்.

பெரியார், விடுதலை – 23.11.1948

எப்பாடுபட்டாவது மக்களைப் பழக்க செய்து, தகப்பன் வேலையை விட்டு, ஜாதி வேலையை விட்டு வேறு வேலைக்கு அனுப்ப வேண்டும்.

பெரியார், விடுதலை – 09.05.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஜாதி எனும் வார்த்தையே வடமொழி ஆகும். தமிழில் ஜாதி என்பதற்கு வார்த்தையே இல்லை.

பெரியார், விடுதலை – 15.09.1957

தொகுப்பு - வி.சி.வில்வம்

எந்தத் தலைமுறையும் தன் ஜாதி வேலைக்கே வராமல் செய்வதுதான் நம் முக்கியக் கடமை ஆகும்.

பெரியார், விடுதலை – 09.05.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஒன்றுமே செய்யாத
நாளை வீணாய்ப்
போனதாகவும்,
உங்கள்
வாழ்நாளில் ஒன்று
குறைந்ததாகவும்
நினையுங்கள்.

பெரியார், குடிஅரசு - 12.09.1926

தொகுப்பு - வி.சி.வில்வம்

மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும், திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் காரியம்தான் சேவை ஆகும்.

பெரியார், குடிஅரசு - 10.01.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

சுயமரியாதை இயக்கத்தவர்கள் எந்த வேலை செய்தாலும், எவ்வளவு சம்பாதித்தாலும் பொது நல சேவைக்கு ஒரு காலத்தை ஒதுக்கியே ஆக வேண்டும்.

பெரியார், குடிஅரசு – 10.01.1948

கிறிஸ்து, முகமது நபி அந்தக் காலத்திற்குச் சரியாய் இருந்திருக்கலாம். இப்போதைக்கும், எல்லா காலத்திற்கும் அவர்கள் தான் வழிகாட்டி என்றால் அதை ஏற்க முடியாது.

பெரியார், குடிஅரசு - 31.05.1936

தொகுப்பு - வி.சி.வில்வம்

மற்றவர்கள் விருப்பு, வெறுப்பைப் பார்க்காமல் தொண்டாற்ற வேண்டும். அதற்கு நம்மிடம் அறிவு இருக்கிறது. அந்த அறிவு மானத்தைக் காப்பாற்ற பயன்பட வேண்டும்.

பெரியார், குடிஅரசு - 10.01.1948

தொகுப்பு - வி.சி.வில்வம்

ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும். அதை விடுத்து தேசம், தேசம் என்று கூக்குரல் இடுவது எமது நோக்கம் அன்று!

பெரியார், குடிஅரசு – 02.05.1926

தொகுப்பு - வி.சி.வில்வம்

நாட்டு மக்களின் அறிவு, கலை, மொழி, உடல் வளர்ச்சிக்காக நாம் உழைத்து வருகிறோம்.

பெரியார், குடிஅரசு – 02.05.1926

தொகுப்பு - வி.சி.வில்வம்

மக்களுள் தன்மதிப்பும், சமத்துவமும், சகோதரத்துவமும் ஓங்கி வளரல் வேண்டும். மக்கள் அனைவரும் அன்பின் மயமாதல் வேண்டும்.

பெரியார், குடிஅரசு - 02.05.1926

தொகுப்பு - வி.சி.வில்வம்

உலகத்தில்
உயிரையும்
கொடுத்துப் பெற
வேண்டியதும்,
அந்தளவு மதிப்பும்,
பெறுமானமும்
உள்ளது
சுயமரியாதையே
ஆகும்.

பெரியார், குடிஅரசு - 17.02.1929

தொகுப்பு - வி.சி.வில்வம்



மனித சக்திக்கு மேற்பட்ட சக்தி இருப்பதாக எவன் கூறினாலும், அவன் எவ்வளவு உயர் நிலையில் இருந்தாலும், அது பித்தலாட்டம் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

பெரியார், விடுதலை - 20.05.1948

படிப்பு வேறு,
அறிவு வேறு
என்பதை
ஞாபகத்தில்
பத்திரமாய்
வைத்துக்
கொள்ளுங்கள்.

பெரியார், குடிஅரசு – 27.07.1930

தொகுப்பு - வி.சி.வில்வம்



இவர்களின் தேசியம் என்பது, யோக்கியர்களை அயோக்கியர்களாகத் தயார் செய்து, தங்களோடு வைத்துக் கொள்வது.

பெரியார், குடிஅரசு - 01.13.1931

தொகுப்பு - வி.சி.வில்வம்

பகுத்தறிவு இல்லாத எந்த ஜீவராசியும் தன் இனத்தை வருத்தி வாழ்வதில்லை. தன் இனத்தைக் கீழ்மைப்படுத்துவதில்லை

பெரியார், குடிஅரசு - 20.05.1935

தொகுப்பு - வி.சி.வில்வம்

பகுத்தறிவு இல்லாத எந்த ஜீவராசியும் தன் இனத்தின் உழைப்பால் வாழ்வதில்லை, தன் இனத்தின் மீது சவாரி செய்வதில்லை

பெரியார், குடிஅரசு - 20.05.1935

2000 வருடங்களுக்கு
முந்தைய விசயங்களைப்
பார்த்துக் கொண்டு,
அப்போது இருந்தவர்கள்
சொன்னதைக் கேட்டுக்
கொண்டு, அவைகளில்
எது மேல், எது கீழ், யார்
பெரியவர் என்று பார்ப்பது
பயனற்ற செயல்.

பெரியார், குடிஅரசு - 31.05.1936

தொகுப்பு - வி.சி.வில்வம்

நம் மக்கள் செல்வத்திலும், அறிவிலும், ஆராய்ச்சியிலும், சமூக உரிமையிலும், அரசியல் உரிமைகளிலும் அடிமைப்பட்டே இருக்கின்றோம்.

பெரியார், குடி அரசு – 16.06.1929

தொகுப்பு - வி.சி.வில்வம்

எந்தெந்த பாஷையை,
எந்தெந்த புத்தகத்தை,
யார் யார் படிக்கலாம்?
என்கிற பிரிவுகளைக்
கூட பார்ப்பனர்கள்
வகுத்து
வைத்திருக்கிறார்கள்.



பெரியார், குடி அரசு - 16.06.1929

தொகுப்பு - வி.சி.வில்வம்

எந்தெந்த ஊரில்,
எந்தெந்த கடவுளை,
யார் யார் எவ்வளவு
தூரத்தில்
பார்க்கலாம்?
கும்பிடலாம்?
என்பதைக் கூட
பார்ப்பனர்கள் பிரித்து
வைத்திருக்கிறார்கள்.

பெரியார், குடி அரசு – 16.06.1929

தொகுப்பு - வி.சி.வில்வம்

எந்தெந்த ஜாதியார், எந்தெந்த ஜாதியாருக்கு எவ்வளவு தூரத்தில் இருக்க வேண்டும் என்பதையும், எந்தெந்த மாதிரி குடுமி வைத்திருக்க வேண்டும் என்பதையும் பார்ப்பனர்கள் பிரித்து வைத்திருக்கிறார்கள்.

பெரியார், குடி அரசு – 16.06.1929

தொகுப்பு - வி.சி.வில்வம்

கத்தி இல்லாத,
துப்பாக்கி இல்லாத,
உடல்வலி கூட இல்லாத
இந்த ஆரியர்களுக்கு
அரசியல், சமூக இயல்,
சமய இயல்,
பொருளாதார இயல்
எல்லாம் எப்படி
கிடைக்கிறது என்பதை
அறிய வேண்டாமா?

பெரியார், குடிஅரசு – 17.09.1939

தமிழர்களுக்கு என்று தனித்த முறையில் ஆரியம் கலக்காத இலக்கியம் கிடையாது.

பெரியார், குடிஅரசு – 27.11.1943

தொகுப்பு - வி.சி.வில்வம்

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பிழைக்க வந்த ஆரியர்கள், இங்கு வந்ததும், இந்த நாட்டு வாழ்க்கைக்குச் சம்பந்தப்படாமல், இந்த நாட்டு வளப்பத்தை அனுபவிக்கத் தொடங்கி விட்டார்கள்.

பெரியார், விடுதலை – 31.07.1951

தொகுப்பு - வி.சி.வில்வம்



நாம் உழுகிறோம், உணவு கிடைக்கிறது. நாம் நெசவு செய்கிறோம், துணி கிடைக்கிறது. நாம் வீடு கட்டுகிறோம், வசதி கிடைக்கிறது. உணவு, உடை, வீடுகள் அளிக்கும் நம்மை ஹிந்து மதம் சூத்திரன் (வேசி மகன்) என்கிறது.

பெரியார், விடுதலை – 31.07.1951

தொகுப்பு - வி.சி.வில்வம்

திராவிடர் கழகமும்,
நானும்
சொல்வதெல்லாம்
நாங்களும் கொஞ்சம்
வாழ வேண்டும் என்பது
தான். இந்த நாட்டிலே
நாங்களும் மனிதத்
தன்மையோடு,
சமத்துவமாக இருக்க
வேண்டும் என்பது தான்.

பெரியார், விடுதலை – 08.01.1953

தொகுப்பு - வி.சி.வில்வம்

மாட்டுக்குப் புல்லைத்
தேடிக் கொண்டு இங்கே
வந்த பார்ப்பனர்கள்,
நம்மைக் கோயிலைக்
கட்ட சொல்லி, சாமியைச்
செய்ய சொல்லி, அந்தச்
சாமியை நாம்
தொட்டால் தீட்டு, சாமி
செத்துவிடும் என்று
கூறிவிட்டானே?

பெரியார், விடுதலை – 06.05.1954

ஜாதி, மதம், தெய்வம்,
தியானம் இந்த
நான்கும் அழிந்தாக
வேண்டும். அதை
அழிக்காமல் மனித
சமூகத்திற்கு
அமைதியும், திருப்தியும்
கிடைக்காது.



பெரியார், குடிஅரசு - 31.05.1936

இந்த நாட்டிற்குப் பிச்சை எடுக்க வந்தவன் தான் இன்று மந்திரி, பிரசிடெண்ட், ராஷ்டிரபதி, சங்கராச்சாரி போன்றோர். அரசாங்கத்தின் உயர்ந்த பதவியிலும் அவன் தான் இருக்கிறான். எப்படி வந்தது இந்த நிலை?

பெரியார், விடுதலை – 06.05.1954

தொகுப்பு - வி.சி.வில்வம்

புராணங்களில் கூட அரசியல் இருக்கிறது. பாகவதத்தில் விஷ்ணு பத்து கடவுள்கள் அவதாரம் எடுத்தார். அந்தப் பத்து அவதாரங்களும் பத்து அரசர்களைக் கொன்று போட்டது.

பெரியார், விடுதலை - 06.04.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

கஞ்சிக்கு நமக்கு உப்பில்லை என்றால், அவன் சோற்றுக்கு நெய் இல்லை என்கிறான்.

பெரியார், விடுதலை - 06.05.1954

தொகுப்பு - வி.சி.வில்வம்



இந்த மன்னர்கள் பார்ப்பனர்களுக்குப் பிழைக்க கோயிலும், மானியமும், வேத பாட சாலையும் ஏற்படுத்தினார்களே ஒழிய, நம் மக்களின் நலனிலோ, கல்வியிலோ அக்கறை காட்டவில்லை.

பெரியார், விடுதலை – 06.04.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்

இந்த நாட்டை ஆண்ட முஸ்லிம்களும், பார்ப்பனர்களுக்கு வாய்க்கரிசி போட்டு விட்டுத்தான் ஆட்சியை நடத்தினார்களே தவிர, இந்த நாட்டு மக்களைப் பற்றி கவலைப்படவில்லை.

பெரியார், விடுதலை – 06.04.1961

தொகுப்பு - வி.சி.வில்வம்



பெரும்பாலான
அரசர்களைக்
எடுத்துக் கொண்டால்
நமக்குக் கேடான
ஆட்சியும்,
பார்ப்பனர்களுக்கு
நன்மையான
ஆட்சியுமே நடந்து
வந்திருக்கிறது.

பெரியார், விடுதலை – 06.04.1961